bes
bible educational services

# ஆசிரியருக்கான வழிமுறைகள்

## பைபிள் டைம் நிலை 1 & 2

### தொடர் A

பாடம் 7-12

bes INDIA
bible educational services
WWW.besweb.com

# ஆசிரியருக்கான வழிமுறைகள்

பைபிள் டைம் பாடங்கள் முதன் முதலில் அஞ்சல் வழி கல்வியாகவே அறிமுகம் செய்யப்பட்டாலும், அஞ்சல் வசதியல்லாத பகுதிகளில் இந்த பாடங்கள் அதிகமாய் பயன்படுத்தப்படுவதால் அஞ்சல் வழியிலேயே இப்பாடங்களை கற்றுத்தருவதில் அநேக சிக்கல்கள் உள்ளன. விசேசமாக ஆப்பிரிக்கா மட்டும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள சபைகளில் மற்றும் பள்ளிகளில் இந்த சிரமம் உள்ளது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக இந்த ஆசிரியருக்கான வழிமுறைகள் உருவாக்கப்படுகிறது. இந்த புத்தகத்தில் உள்ள ஆசிரியருக்கான வழிமுறைகள் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பாடங்களுக்கானவை, அதாவது வயது 5-10 வரை உள்ள பிள்ளைகளுக்கானவை.

பைபிள் டைம் பாடங்களில் உபயோகப்படுத்தப்படும் அதே வேதாகம பகுதியே இந்த ஆசிரியர் கையேட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடங்கள் வாராந்திர அடிப்படையில் பயன்படுத்தப்பட வேண்டியவை. ஏப்ரல் மாத பாடங்கள் ஈஸ்டரை பற்றியும், டிசம்பர் மாத பாடங்கள் கிறிஸ்துமஸ் பற்றியும் இருக்கும்.

சில பகுதிகளில் வாராந்திர பாடங்கள் யு 4 லும் சில பகுதிகளில் யு5 புத்தகத்தில் 24 பாடங்களும் கொடுக்கப்படும். பொதுவாக ஆசிரியர் சபையிலோ அல்லது பள்ளியிலோ வைத்து ஒரு பாடத்தைக் கொடுப்பார், அது வீட்டுக்கு எடுத்து செல்லப்பட்டு மறுவாரம் திரும்ப கொடுக்கப்படும். அந்த மாத முடிவில் எல்லா பாடங்களும் திரும்ப பெறப்பட்டு ஆசிரியரால் திருத்தப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும், பின்னர் திரும்ப மாணவர்களிடம் கொடுக்கப்படும்.

புத்தகங்கள் சரியாக பயன்படுத்தப்பட்டால், ஒவ்வொரு வகுப்பு நேரம் முடிந்தவுடன், புத்தகங்கள் திரும்ப பெறப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும். பல நேரங்களில் அது சாத்தியப்படாது, எனவே அப்படிப்பட்ட நேரங்களில் மாணவர்களிடம் புத்தகங்கள் மாற்றி கொடுக்கப்பட்டு ஒவ்வொருவரும் தங்கள் நண்பனின் புத்தகத்தை திருத்தி மதிப்பெண் இடுவதற்கான இடம் உண்டு, மற்றும் மாணவரின் முன்னேற்றத்தைப் பற்றி குறிப்பு எழுதும் இடமும் உண்டு, புத்தகத்தின் கடைசியிலே 6 மாத கால மதிப்பெண் சதவீதத்தைக் குறிக்கவும் மாணவருக்குக் கொடுக்கும் படியான ஒரு சான்றிதழும் உண்டு.

## ஆசிரியருக்கான ஆயத்தம்

ஆசிரியருக்கு எந்த ஒரு சுதந்திரமுமில்லாமல் அவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் இருக்க எங்களுக்கு மனதில்லை. கீழ்க்காணும் குறிப்புகள் பைபிள் டைம் புத்தகங்களை அதிக ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த உதவும்.

கதையை நன்றாக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்: வேதாகம கதையையும் பைபிள் டைம் பாடத்தையும் ஆசிரியர்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டும். பாடங்களை கற்றுக்கொடுக்கும் முன்னரே பாடங்களை ஆசிரியர்கள் செய்து முடித்திருக்க வேண்டும், பாடங்களை ஆயத்தம் செய்யும் போது வழிமுறைகளையும் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை புரிந்து கொள்ள வேண்டும்: ஒவ்வொரு பாடத்திட்டத்தின் ஆரம்பத்தில் “நாம் கற்றுக்கொள்வது” என்கிற ஒரு பகுதி உண்டு அதன் கீழ் 2 குறிப்புகள் உண்டு. இவைகள் தான் பிள்ளைகள் அன்றைய நாளில் ஆசிரியர் பாடத்தை எடுத்து முடித்த பின்பும், பாடப்புத்தக வேலையை செய்து முடித்த பின்பும் மாணவர்கள் கற்றுக்கொள்ள போகிற விசயங்கள். முதல் குறிப்பு பிள்ளைகள் பாடத்தை புரிந்துகொள்ள உதவும், இரண்டாம் குறிப்போ பிள்ளைகளை சிந்திக்கச்செய்வதும், பின்னர் அதை கடைபிடிக்கவும் தீர்மானம் எடுக்கவும் உதவும். இந்த குறிப்புகள் அன்றைய நாளில் கற்றுக்கொடுக்கும் முக்கிய சத்தியத்தின் சிறு குறிப்புகளேயாகும். ஆசிரியர்களும் இந்த குறிப்புகளை தங்கள் தனிப்பட்ட வாழ்வில் ஒப்பிட்டு சிந்தித்துப் பார்க்கலாம்.

அறிமுகப்படுத்தவும்: ஒவ்வொரு பாடத்திலும் பிள்ளைகள் அந்த சூழ்நிலையில் இருக்கும் போது அவர்களின் அனுபவங்கள் எப்படியிருக்குமோ அதை வைத்தே பாடங்கள் துவக்கப்படும். பாடங்களை துவக்க பிள்ளைகளோடு கலந்து ஆலோசிக்க சில கருத்துக்களை நாங்கள் கொடுத்துள்ளோம்.

கற்றுக்கொடுக்கவும்: ஒவ்வொரு கதையிலும் முக்கிய புள்ளிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த கதைகளை கற்றுக்கொடுக்கும் போது அதை ரசிக்கும் விதமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் கற்றுக்கொடுக்கவும் மற்றும் இந்த புத்தகத்தை பிள்ளைகள் முன்பாக திறந்து பார்க்காமல் முன்னதாகவே கதையை நன்கு அறிந்து போதிக்கவும் வேண்டும் என நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம். பிள்ளைகள் கதையின் முக்கிய பாடத்தை நன்கு கற்றுக்கொண்டு தாங்கள் எடுக்க வேண்டிய தீர்மானத்தை நன்கு புரிந்து எடுக்க ஆசிரியர்கள் வாஞ்சிக்க வேண்டும். தேவைக்கு ஏற்றார் போல சில விளக்கங்களை நாங்கள் கொடுக்க முயற்சித்திருக்கிறோம். அவை இட்டாலிக்ஸ் வடிவிலே இருக்கும்.

கற்றுக்கொள்ளவும்: ஒவ்வொரு கதைக்கும் ஒரு முக்கிய வசனம் உண்டு. சில சமயங்களில் இரண்டு வசனங்களும் இருக்கும். மற்றொரு வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவை எப்பொழுதும் எளிமையாக கற்றுக்கொள்ளுகிற அளவிற்கே இருக்கும். வேதாகம முக்கிய வசனங்களை பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் அறிவிலே வளர்வதற்கு முக்கிய வசனங்களை அடிக்கடி ஞாபகப்படுத்துதல் அவசியம் என நாங்கள் நம்புகிறோம்.

செய்து முடிக்கவும்: ஒரு பள்ளியாக இருக்கும் பட்சத்தில், பிள்ளைகளுக்கு பாடத்தாள்களை செய்துமுடிக்கும் திறன் எவ்வளவு உண்டு என்பதையும், ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு எவ்வளவு தேவை என்பதையும் நன்கு அறிந்து கொள்ள முடியும். ஆனால், சில இடங்களில் ஆசிரியர் பாடப்பகுதியை சத்தமாக வாசிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். சில பிள்ளைகள் தாங்களாகவே வாசித்துக்கொள்வார்கள். எவ்வித சூழ்நிலையானாலும் சரி, பிள்ளைகளின் கவனத்தை கட்டுக்குள் வைக்கவும், கேள்விகளை பற்றியக் குறிப்புகளை கவனிக்கவும் இதை செய்யலாம். பள்ளிக்கூடம் அல்லாத சூழ்நிலையிலே நீங்கள் பைபிள் டைமை பயன்படுத்துபவராயிருந்தால், நீங்கள் பிள்ளைகளோடிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், மற்றும் பாடங்களை செய்து முடிக்கும் போது மாணவர்களுக்கு அது சுமையாக இல்லாமல், தேர்வு போல இல்லாமல் சுவாரஸ்யமாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

நினைவில் கொள்ளவும்: எங்கெல்லாம் முடிகிறதோ அங்கெல்லாம், கேள்வி பதில்கள் மூலமாகவும், நடித்து காட்டுதல் மூலமாகவும், பாடங்களை நன்கு கற்றுக்கொள்ளவும், நினைவில் கொள்ளவும் உதவி செய்ய முயற்சி செய்திருக்கிறோம்.

**முக்கிய வசனங்களைக் கற்றுக்கொடுத்தல்:**

கற்றுக்கொடுக்கப்படும் வசனத்தை ஒரு தாளிலோ அல்லது போர்டிலோ சில வார்த்தைகளை தவிர்த்து எழுத வேண்டும். பிள்ளைகள் வசனத்தை மீண்டும் மீண்டும் வாசிக்க செய்ய வேண்டும். அவர்கள் சொல்ல சொல்ல மீதி வார்த்தைகளை அழிக்க வேண்டும். கடைசியிலே எல்லா வார்த்தைகளையும் அழித்து முடிவதற்குள் பிள்ளைகள் முழு வசனத்தையும் கற்றுக்கொள்வார்கள்.

**முக்கிய வசனத்தைக் கற்றுக்கொடுக்க,**

a) ஹெங்க்மேன் விளையாட்டை போல, வசனங்களின் எழுத்துக்களுக்கு பதிலாக கோடிட்ட இடம் இட வேண்டும். அந்த வசனத்தில் எழுத்துக்களை கீழே எழுத வேண்டும். பிள்ளைகள் கோடிட்ட இடத்திற்கு பொருத்தமான வார்த்தைகளை கவனித்து எழுத வேண்டும்.

b) வேதாகமத்தை பிள்ளைகள் கையில் கொடுத்து சொல்லும் வசனத்தை அவர்கள் கண்டுபிடித்து வாசிக்க செய்ய வேண்டும்.

**காலத்திட்டம்:**

பாட ஒழுங்கு: ஒவ்வொரு பாடத்திற்கும் பாடம் நடத்தும் ஒழுங்கை நாங்கள் தீர்மானித்துள்ளோம், ஆனாலும் ஆசிரியர்கள் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்றார்போல் அதை மாற்றிக்கொள்ளலாம்.

முன்னுரையும், கதை கூறுதலும் - ஏறக்குறைய 15 நிமிடங்கள் முக்கிய வசனம் கற்றுக்கொடுத்தல் - 5-10 நிமிடங்கள் பாடத்தாள் வேலையை முடித்தல் - 20 நிமிடங்கள் வினா விடை மற்றும் இதர வேலைகள் - 5-10 நிமிடங்கள்

இந்த முக்கிய வாசகத்தை ஞாபகம் வைக்கவும்.

"சொல்லுங்கள் ஒருவேளை மறந்துவிடுவேன்
காட்டுங்கள் அதை நான் ஞாபகம் கொள்வேன்
செய்ய வையுங்கள் நான் புரிந்துகொள்வேன்"

## பைபிள்டைம் பாடத்திட்டம்

| | நிலை 0 (ப்ரீ-ஸ்கூல்)<br>நிலை 1 (5-7 வயது)<br>நிலை 2 (8-10 வயது) | நிலை 3 (11-13 வயது) | நிலை 4 (14+ வயது) |
|---|---|---|---|
| **தொடக்கநிலை தொடர்பாடங்கள்** | 1. தொடக்கப்பாடம் - அறிமுகம்<br>2. U1 - லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 - லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 - லூக்காவின் சுவிசேஷம் | 1. தொடக்கப்பாடம் - அறிமுகம்<br>2. U1 - லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 - லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 - லூக்காவின் சுவிசேஷம் | 1. தொடக்கப்பாடம் - அறிமுகம்<br>2. U1 - லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 - லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 - லூக்காவின் சுவிசேஷம் |
| **தொடர் A** | 1. சிருஷ்டித்தல்<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. ஆபிரகாம்<br>6. ஆபிரகாம்<br>7. பேதுரு<br>8. பேதுரு<br>9. யாக்கோபு<br>10. ஆதி கிறிஸ்தவர்கள்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. சிருஷ்டித்தல்<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. ஜெபம்<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. சிருஷ்டித்தல் & வீழ்ச்சி<br>2. ஆரம்பகால முன்னேற்றங்கள் - ஆதியாகமம்<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. கிறிஸ்தவ வாழ்க்கை<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| **தொடர் B** | 1. கிறிஸ்துவின் ஆரம்ப வாழ்க்கை<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. உவமைகள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. இயேசு சந்தித்த மக்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. ஆதி கிறிஸ்தவர்கள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. சுவிசேஷம் எழுதிய ஆசிரியர்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. ஆதி கிறிஸ்தவர்கள்<br>6. யாக்கோபும் அவருடைய குடும்பமும்<br>7. யோசேப்பு<br>8. அப்போஸ்தலர். 2:42 - முன்னே இருக்கும் வழி<br>9. மோசே<br>10. மோசே<br>11. நியாயப்பிரமாணம்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| **தொடர் C** | 1. தானியேல்<br>2. அதிக அற்புதங்கள்<br>3. இயேசு சந்தித்த மக்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத் & சாமுவேல்<br>6. தாவீது<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. யோனா<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சந்தித்த மக்கள்<br>3. அதிக அற்புதங்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. தேவன் பயன்படுத்திய மனிதர்கள் - ப.ஏ.<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சொன்னவை<br>3. கர்த்தருடைய வல்லமை<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. அதிக ப.ஏ. கதாபாத்திரங்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை |

# A7 கதை 1

**பேதுரு பிரசங்கித்தல் –பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு பேதுரு இயேசுவைப் பற்றி பிரசங்கிப்பதைப்பற்றி இக்கதை கூறுகிறது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளவது அவசியமாயிருந்தது.<br>• கர்த்தராகிய இயேசுவை இரட்சகர் என்று நம்பியிருக்கிற அனைவருக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் வாழ்கிறார்.<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 2:36**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 2:1-14, 36-39** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • பரிசுத்த ஆவியானவரை அறிமுகப்படுத்துவதற்காகக் கேள்விகளைப் பயன்படுத்துங்கள். நீங்கள் காற்றைப் பார்க்க முடியுமா? முடியாது. அது இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? அது செயல்படுவதை உங்களால் பார்க்கமுடியும். வெளியில் பார்க்க முடிந்தால், காற்று இருப்பதற்கான ஆதாரத்தைப் பாருங்கள்.<br>• ஈஸ்டர் கதையைப் பிள்ளைகளுக்கு நினைவூட்டுங்கள் – இயேசு இறந்து உயிர்த்தெழுந்திருந்தார். அவர் மீண்டும் பரலோகத்திற்கு திரும்பிப்போவதற்கு முன், கண்களுக்குத் தென்படாத ஒரு மிகவும் விசேஷமான உதவியாளரை அனுப்பிவைப்பதாக தமது சீடர்களுக்கு வாக்களித்திருந்தார்.<br>• பரிசுத்த ஆவியானவர் என்று அழைக்கப்படுகிற நபர்தான் இந்த உதவியாளர், அவர் அவர்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் வந்து வாழக்கூடியவர். காற்றைப் போலவே, அவர்களால் பரிசுத்த ஆவியானவரைப் பார்க்க முடியவில்லை, ஆனால் அவர்களுடைய வாழ்க்கையில் அவர் செய்யும் மாற்றத்தை அவர்களால் அறிய முடிந்தது. |
| **கற்றுக்கொடுங்கள்** | • இயேசு பரலோகத்திற்கு சென்றுவிட்ட பிறகு, ஒரு நாள் எருசலேமிலிருந்த ஒரு வீட்டில் சீடர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடியிருந்தனர். (அப்போஸ்தலர் 2: 1-4) திடீரென்று அந்த இடமெல்லாம் வீசியடிக்கும் பெருங்காற்றின் இரைச்சலைப்போன்ற சத்தத்தினால் நிறைந்தது. பின்னர் சுடரொளி போன்றவை ஒவ்வொருவரின் தலையின் மேலும் வந்தமர்ந்தன. பரிசுத்த ஆவியானவர் வந்துவிட்டார்! அந்த விசேஷ பரிசு கிடைத்தபோது அப்போஸ்தலர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? (உற்சாகமாக இருந்தனர், வியந்துபோய் இருந்தனர், இயேசுவின் வாக்குறுதி நிறைவேறிவிட்டது என்ற மகிழ்ச்சியில் இருந்தனர்).<br>• தாங்கள் வெவ்வேறு மொழிகளில் பேசிக்கொண்டிருப்பதை அவர்கள் கண்டுபிடித்தார்கள்! நாம் இளம் வயதில் பெற்றோரிடமிருந்து கற்றுக்கொண்ட மொழியை அல்லது நமக்குக் கற்றுக்கொடுத்த மொழியை மட்டுமே பேச முடியும் என்பதை விளக்கிக்காண்பியுங்கள். இயேசுவின் சீடர்களுக்கு அந்த மொழிகளை யாரும் கற்றுத்தந்திருக்கவில்லை. இந்த அனைத்து அடையாளங்களும் பரிசுத்த ஆவியானவர் வந்துவிட்டதைக் காட்டியது. நீங்கள் இந்த அறையைக் கடந்து சென்றிருந்தால் என்ன நினைத்திருப்பீர்கள்?<br>• அருகிலிருந்த மக்கள் அந்தச் சத்தத்தைக் கேட்டு குழப்பமடைந்தார்கள், ஆனால் அவர்களுக்கு அது வியப்பாகவும் இருந்தது! (அப்போஸ்தலர் 2: 5-13)<br>• என்ன நடக்கிறது என்பதை விளக்கவும், கர்த்தராகிய இயேசுவைப் பற்றி சொல்லவும் இது தனக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பு என பேதுரு அறிந்திருந்தார். (அப்போஸ்தலர் 2: 36-39) ஒரு பெரிய மக்கள் கூட்டத்திற்கு பிரசங்கிப்பதில் (பேசுவது / விளக்குவது) எது கடினமாக இருந்திருக்கும்? (சற்று பயந்து, சொல்ல சரியான வார்த்தைகள் தெரிந்திருக்கவேண்டுமே, மக்கள் என்ன நினைப்பார்களோ அல்லது செய்வார்களோ என்பதைப் பற்றி கவலைப்பட்டார்கள்....) ஆனால் பரிசுத்த ஆவியானவர் உதவியதால் பேதுருவால் அதைச் செய்ய முடிந்தது.<br>• பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் தங்கள் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட வேண்டியது அவசியமாய் காணப்பட்டது, நாமும் கூட இரட்சிக்கப்பட வேண்டும்.<br>• கர்த்தராகிய இயேசுவை இரட்சகராக விசுவாசிக்கிற எவருக்கும் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படுகிறார் என்பதை விளக்குங்கள். இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்கு சொல்ல பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்கிறார்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – பெந்தேகோஸ்தே நாள். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய அப்போஸ்தலர் 2: 36ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். இது பேதுரு பிரசங்கித்தபோது, அவர் பயன்படுத்திய ஒரு வேதப்பகுதியாகும். அவர்கள் இயேசுவைக் கொலைசெய்தவர்கள் என்றும், ஆனால் தேவன் அவரை மீண்டும் உயிரோடு எழுப்பினார் என்றும் பேதுரு கூறினார். இயேசு வெறும் மனிதரல்ல, அவரே கர்த்தர் மற்றும் கிறிஸ்து என்பதும் இதனால் நிரூபிக்கப்பட்டது. |
| **நினைவுகூருங்கள்** | • பரிசுத்த ஆவியானவர் வந்தபோது அப்போஸ்தலர்கள் எங்கேயிருந்தார்கள்?<br>• பரிசுத்த ஆவியானவர் எதைப் போன்று இருப்பதாக காணப்பட்டது?<br>• அப்போஸ்தலர்கள் என்னக் கண்டார்கள்?<br>• அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட உடனேயே என்ன செய்ய முடிந்தது?<br>• சம்பவித்துக்கொண்டிருந்ததை கேட்டுக்கொண்டிருந்தவர்கள் யார்?<br>• எந்த அப்போஸ்தலர் எழுந்து, என்ன நடந்ததென்பதை விளக்கினார்?<br>• பேதுரு யாரைப்பற்றி பேசினார்?<br>• மக்கள் தங்களுடைய பாவத்திற்காக என்ன செய்யவேண்டும் எனப் பேதுரு கூறினார்?<br>• அவர்கள் அதை செய்தால் தானமாக என்ன கிடைக்கும்?<br>• இன்று எப்படிப்பட்ட மக்கள் தங்களுக்குள்ளே பரிசுத்த ஆவியானவரைப் பெற்று வாழ்கிறார்கள்? |

## A7 கதை 2

**பேதுரு ஒரு முடவனைக் குணமாக்குகிறார் – இந்தக் கதை தேவனுடைய சுகமளிக்கும் வல்லமையைப் பற்றிதாகும்.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• முடவனைக் குணமாக்க பேதுரு மற்றும் யோவானின் மூலமாக இயேசுவின் வல்லமை கிரியைசெய்தது.<br>• பேதுருவும் யோவானும் முடமான மனிதனுக்கு உதவினார்கள், நாமும் மற்றவர்களுக்கு உதவிசெய்ய முயற்சி செய்ய வேண்டும்.<br>**முக்கிய வசனம்: நிலை 1 – அப்போஸ்தலர் 3: 6, நிலை 2 – அப்போஸ்தலர் 3: 16**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 3: 1-12** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • நடக்க முடியாத முடவன் தான் உயிர்ப் பிழைத்திரும்படி உணவு வாங்குவதற்காகக் கெஞ்சிப் பணம் பிச்சைக் கேட்பதை உணர்வுப்பூர்வமாக விவரியுங்கள்.<br>• காண்பிக்க ஒரு ஜோடி ஊன்று கட்டைகள் உங்களிடம் இருக்கலாம், ஆனால் இந்த மனிதனை அவனது நண்பர்கள் அங்கு எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது என்பதை விளக்குங்கள்.<br>• அந்த மனிதனைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஒரு சோகமான முகத்துடன்கூடிய ஒரு எளிய வரைபடத்தை பயன்படுத்தவும். |
| **கற்றுக்கொடுங்கள்** | • பேதுருவும் யோவானும் ஒருநாள் ஆலயத்திற்குச் சென்றபோது முடவன் ஒருவன் அவர்களிடம் பணம் பிச்சைக் கேட்டான். (அப்போஸ்தலர் 3: 1-5) அவர்கள் நின்று அவனுடன் சற்று நேரம் செலவிட்டனர்.<br>• பேதுருவின் வார்த்தைகளைப் பயன்படுத்தவும். “வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட!” (அப்போஸ்தலர் 3: 6-7) வெள்ளியும் பொன்னும் சிறிதளவே உதவும் – அம்மனிதனின் கால்களை சரிசெய்ய அதனால் முடியவில்லை என்று விளக்குங்கள். முற்றிலும் அந்த மனிதனின் வாழ்க்கையை மாற்றுவதற்கு ஏதோ ஒன்றைச் செய்ய பேதுருவால் முடிந்தது.<br>• பேதுரு கைக்கொடுத்து அவன் எழுந்துநிற்க உதவினார். திடீரென அந்த மனிதனின் கால்களும் பாதங்களும் பலமடைந்தன. அவன் தனது வாழ்க்கையில் முதல் முறையாக நடக்கவும் குதிக்கவும் முடிந்தது! அவன் தேவனை மனதாரப் புகழ்ந்து பேதுரு மற்றும் யோவானோடு தொடர்ந்து ஆலயத்தில் இருந்தான். (அப்போஸ்தலர் 3: 8) முந்தைய முகத்திற்கு மாறாக மகிழ்ச்சியான முகமுள்ள ஒரு வரைபடத்தைக் காட்டுங்கள். ஒவ்வொரு நாளும் அந்தப் பிச்சைக்காரனைப் பார்க்கும் வாய்ப்பு உங்களுக்கு இருந்திருந்தால், நீங்கள் என்ன நினைத்திருப்பீர்கள்?<br>• நடந்தவற்றைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். அப்போஸ்தலர் (3: 9-12)<br>• பேதுருவின் முன்மாதிரியை நாம் எவ்வாறு பின்பற்றலாம் என்பதைக் கவனியுங்கள். நடைமுறையில் மற்றவர்களுக்கு உதவி செய்வதைப் பற்றி பேசவும். மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய மிக முக்கியமான காரியம் கர்த்தராகிய இயேசு பற்றிய நற்செய்தி என்று நீங்கள் குறிப்பிடலாம்.<br>• அந்த மனிதனைப் போலவே நமது வாழ்க்கையிலும்கூட ஒரு பிரச்சனை இருக்கிறது. அந்த மனிதன் நடக்க முடியாமல் இருந்து விடுவிக்கப்பட்டதைப் போலவே, இயேசுவின் வல்லமை நம்மை பாவத்திலிருந்து விடுவிக்கிறது.<br>• நாம் தேவனைத் துதித்துப் பாடுவதற்காக உள்ள சில காரியங்களை சிந்தித்துப் பாருங்கள்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – முடவனான பிச்சைக்காரன் குணமாக்கப்படுகிறான். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய நிலை 1: அப்போஸ்தலர் 3: 6, நிலை 2 – அப்போஸ்தலர் 3: 16 ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள்.<br>பொருத்தமாக இருந்தால், பிள்ளைகள் நடக்கும்போது, தாண்டும்போது அல்லது குதிக்கும்போது இந்த முக்கிய வசனத்தைச் சொல்லலாம். |
| **நினைவுகூருங்கள்** | • அப்பொழுது நேரம் என்ன?<br>• பேதுருவும் யோவானும் எங்கே போனார்கள்?<br>• அந்த ஆள் எவ்வளவு காலம் நடக்க முடியாமல் இருந்தான்?<br>• அவன் ஒவ்வொரு நாளும் எங்கு உட்கார்ந்தான்?<br>• அவன் பேதுருவினிடத்திலும் யோவானிடத்திலும் என்னக் கேட்டான்?<br>• அவனைக் குணப்படுத்த பேதுரு யாருடைய பெயரைப் பயன்படுத்தினார்?<br>• பேதுரு அவனிடம் பேசி வேறு என்ன செய்தார்?<br>• அவனால் இப்போது செய்ய முடிகிற மூன்று விஷயங்களைக் குறிப்பிடுங்கள்?<br>• அவன் குணமானப் பின்னர் எங்கு சென்றான்?<br>• இயேசுவின் வல்லமை நம் வாழ்வில் என்ன செய்ய முடியும்? |

## A7 கதை 3

**சிறையில் பேதுரு – தேவன் தன்னை சேவிப்பவர்களுக்கு எவ்வாறு உதவிசெய்கிறார் என்பதைப் பற்றியதே இந்த கதை.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>● கர்த்தராகிய இயேசுவை சிலுவையில் அறைந்த மதத் தலைவர்களால் ஆதிக் கிறிஸ்துவர்கள் எதிர்ப்பை சந்தித்தனர்.<br>● இயேசுவை உண்மையிலேயே நேசிக்கிறவர்கள், எந்தப் பிரச்சினைகள் வந்தாலும் அவருக்குக் கீழ்ப்படிய விரும்புவர்கள்.<br>**முக்கிய வசனம்: எபிரெயர் 13: 6**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 4: 1-22** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | ● இது முந்தையக் கதையின் ஒரு தொடர்ச்சியாகும், எனவே ஆரம்பத்தில் ஒரு சில அடிப்படை உண்மைகளை மீண்டும் சிந்திப்பது சிறப்பாய் இருக்கும்.<br>● மகிழ்ச்சியான மற்றும் சோகமான முகமுடைய வரைபடங்களை தேவைப்படும்போது பயன்படுத்தவும்.<br>● அந்த மனிதனால் எப்படி நடக்க முடிந்தது? இயேசுவின் வல்லமையினாலேயே அது முடிந்தது என்பதைக் பிள்ளைகள் புரிந்துகொண்டதை உறுதிசெய்யுங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | ● இதற்குப் பின்னர் பேதுருவும் யோவானும் உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசுவைப் பற்றி பிரசங்கித்தார்கள், அநேகர் விசுவாசித்தார்கள். (அப்போஸ்தலர் 4: 1-2,4) ஆனால், இயேசு உயிர்த்தெழுந்தார் என்று பேதுரு மக்களுக்கு சொல்லிவந்ததால் தேவாலய பொறுப்பாளர்களாக இருந்தவர்கள் பேதுருவின்மீது கோபமடைந்தார்கள். உடனே அவர்கள் பேதுருவையும் யோவானையும் கைதுசெய்து அவர்களை சிறையிலடைத்தார்கள் (அப்போஸ்தலர் 4: 3). இது அவர்களுக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை விளக்குங்கள்.<br>● அடுத்த நாள் காலை அவர்கள் வெளியே கொண்டுவரப்பட்டு ஒரு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டனர். (அப்போஸ்தலர் 4: 5-7) ஒருவர் குற்றம்புரிந்தவரா இல்லையா என்பதை முடிவு செய்யும் ஒரு குழுவே நீதிமன்றம் என்பதை விளக்குங்கள்.<br>● அந்த மனிதன் எப்படி குணமாக்கப்பட்டான் என்பதை பரிசுத்த ஆவியானவரின் உதவியால் பேதுரு மீண்டும் ஒருமுறை விளக்கினார். (அப்போஸ்தலர் 4: 8-12) பேதுருவையும் யோவானையும் என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுப்பது நீதிமன்றத்திற்கு கடினமாகக் காணப்பட்டது! ஒரு பெரிய அற்புதம் நடந்தது என்று அவர்கள் அறிந்திருந்தாலும், அதைப் பற்றி விவாதித்தபின் தீர்மானம் எடுத்து, இனி இயேசுவைப் பற்றிப் பேசக்கூடாது என்று பேதுருவையும் யோவானையும் அவர்கள் எச்சரிக்கை செய்தார்கள். (அப். 4: 13-19)? பேதுருவும் யோவானும் இதைப் பற்றி எப்படி உணருவார்கள்? அவர்களால் கீழ்ப்படிய முடியுமா?<br>● கர்த்தராகிய இயேசுவைப் பற்றிப் பேசாமல் இருப்பது முடியாத காரியம் என்பதை பேதுருவும் யோவானும் அறிந்திருக்கிறார்கள்! (அப்போஸ்தலர் 4: 20) அவர்கள் இயேசுவை மிகவும் நேசித்ததால், அவருக்குக் கீழ்ப்படியத் தீர்மானித்தார்கள். என்ன நடந்தாலும் கர்த்தர் தங்களோடுகூட இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு உதவிசெய்வார் என்பதை அறிந்திருந்தார்கள்.<br>● எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், நாமும் அவரை நேசிக்கவும் அவருக்குக் கீழ்ப்படியும் வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – பேதுருவும் யோவானும் கைதுசெய்யப்படுகிறார்கள். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய எபிரேயர் 13: 6-ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். அடுத்த இரண்டு பாகங்களைச் சேர்ப்பதற்குமுன், முதல் ஐந்து வார்த்தைகள் மற்றும் குறிப்புகளுடன் நீங்கள் “ஹேங்மேனை” விளையாடலாம்.<br>பிள்ளைகளை மூன்று குழுக்களாகப் பிரிக்கலாம், ஒவ்வொரு பாகத்தையும் ஒரு குழு கூறட்டும். இந்த வார்த்தைகள் பேதுருவுக்கும் யோவானுக்கும் உதவியிருக்கலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?அவற்றை அறிந்திருப்பது நமக்கும் உதவலாம் என்பதை விளக்குங்கள்! |
| **நினைவுகூருங்கள்** | வினாடி வினாவிற்கான வாக்கியங்களை ஒரு கார்டில் எழுதி பையில் வையுங்கள்.<br>ஒவ்வொரு வாக்கியத்திற்கும் பல புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. (5 முதல் 100 வரை). இரண்டு அணிகள் இருக்கட்டும்.<br>● பேதுருவும் யோவானும் காவலர்களிடம் மிகவும் கோபமாக இருந்தார்கள்.<br>● அவர்கள் சிறையில் ஒரு இரவு கழித்தனர்.<br>● அவர்கள் விடுவிக்கப்பட்டபோது ஒரு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டனர்.<br>● இயேசுவின் வல்லமை அந்த மனிதனை குணப்படுத்தியதாக பேதுரு கூறினார்.<br>● பேதுருவும் யோவானும் நீதிமன்றத்தில் பேச பரிசுத்த ஆவியானவர் உதவினார்.<br>● பேதுருவும் யோவானும் நீதிமன்றத்தில் இருந்து தப்பினர்.<br>● பேதுருவும் யோவானும் இயேசுவைப் பற்றி பேசக்கூடாது என்று நீதிமன்றம் முடிவு செய்தது.<br>● பேதுருவும் யோவானும் நீதிமன்றத்திற்குக் கீழ்ப்படிவோம் என்று சொன்னார்கள். |

# A7 கதை 4

**பேதுரு விடுதலையாகிறார் – இந்தக் கதை தேவன் ஜெபத்திற்கு பதிலளிப்பதைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• தேவன் தம்முடைய வல்லமையைக் கொடுத்து கிறிஸ்தவர்களுக்கு உதவிசெய்கிறார், அதனால் அவர்கள் அவருடைய வேலையை செய்ய முடியும்.<br>• நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஜெபம் முக்கியமானதாகும்.<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 4: 31 அல்லது மத்தேயு 6: 33**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 4: 23-31** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பிள்ளைகள் தங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினருடன் பகிர்ந்துகொள்ள விரும்பும் செய்திகளைப் பற்றி பேசலாம் – ஒருவேளை அது அவர்களின் உல்லாசப்பயணத்தைப் பற்றியோ அல்லது ஒரு ஓட்டப்பந்தயத்தில் வென்றதைப் பற்றியோ பரபரப்பான செய்தியாக இருக்கலாம். அல்லது ஒருவேளை அவர்கள் ஏதோவொன்றைப் பற்றிக் கவலைப்பட்டு, பின்னர் நண்பர்களுடன் பகிர்ந்துகொண்டபோது அவர்கள் இவர்களுக்கு உதவியதைப் பற்றியதாகவும் இருக்கலாம். |
| **கற்றுக்கொடுங்கள்** | • தங்கள் நண்பர்களுடனும் பகிர்ந்துகொள்ளுவதற்கு பேதுருவினிடத்திலும் யோவானிடத்திலும் செய்தி இருந்தது. (அப்போஸ்தலர் 4:23) அவர்கள் சிறைச்சாலையைவிட்டு வெளியே வந்துவிட்டார்கள் என்ற நற்செய்தியை விளக்குங்கள், ஆனால் மோசமான செய்தி என்னவென்றால் அவர்கள் இயேசுவைப் பற்றி பேசவேக்கூடாது என்று சொல்லப்பட்டனர்!<br>• பேதுருவும் யோவானின் நண்பர்களும் ஜெபம்செய்ய ஞானமான தீர்மானத்தை எடுத்தனர். (அப்போஸ்தலர் 4: 24-30) தேவன் எல்லாவற்றையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை அவர்கள் அறிந்தார்கள். அவர் அவர்களைத் தடுக்க முயன்றவர்களைவிட மகா வல்லவர். அவர்கள் ஜெபித்தபோது, ஏற்கெனவே தேவனுடைய வல்லமை வெளிப்படுத்திய அற்புதமான காரியங்களை அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். தங்களுக்கு தைரியத்தைக் கொடுத்து, இயேசுவின் வல்லமையால் இன்னும் பல அற்புதங்களைச் செய்யும்படி தேவனிடம் ஜெபித்தார்கள். (அப்போஸ்தலர் 4:29,30)<br>• அவர்கள் ஜெபித்த உடனேயே, தேவன் அவர்களுடைய ஜெபங்களுக்கு பதிலளித்தார்! (அப்போஸ்தலர் 4: 31) கர்த்தராகிய இயேசுவைப் பற்றி அவர்கள் பேசியபோது, அவர்களுக்கு உதவி செய்வதற்காக அவர்களிடம் இருக்கும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை மீண்டும் காண்பித்ததால் அந்தக் கட்டிடம் அசைந்தது என்பதை விளக்குங்கள்.<br>• கடினமான காரியங்களை செய்யவேண்டி இருக்கும்போது நாம் தேவனிடம் ஜெபிக்கலாம் என்பதை விளக்குங்கள்.<br>• தேவன் நம்முடைய ஜெபங்களைக் கேட்டு, பதிலளிக்கிறார். இன்றையக் கதையில் வரும் மக்களைப் போலவே நாமும் கர்த்தராகிய இயேசுவை முதன்மையாக வைக்க அவர் உதவிசெய்வார்.<br>• இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்கவிடாமல் மற்றவர்கள் தடுக்க முயலுகிற நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்களைக் குறித்து நிலை 2ல் இருக்கும் பிள்ளைகளுடன் நீங்கள் பேசலாம். கர்த்தராகிய இயேசுவை முதன்மையாக வைக்க அவர்களுக்கு தைரியம் கொடுக்கவேண்டுமென நாம் ஜெபம் செய்யலாம்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – பேதுருவும் யோவானும் கைதுசெய்யப்படுகிறார்கள். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய அப்போஸ்தலர் 4.31 அல்லது மத்தேயு 6.33ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். மத்தேயு 6: 33ல், "தேடு" என்ற வார்த்தையின் எளிய அர்த்தம் வை என்பதாகும். தேவனுடைய ராஜ்யம் என்பது கர்த்தராகிய இயேசு உட்பட தேவனுக்கு முக்கியமான எல்லாவற்றையும் குறிக்கிறது. |
| **நினைவுகூருங்கள்** | வினாடி வினாவிற்கான வாக்கியங்களை ஒரு கார்டில் எழுதி பையில் வையுங்கள்.<br>கி7ல் இருக்கும் நான்கு கதைகளையும் சேர்த்து ஒரு வினாடி வினாவை தயாரியுங்கள்.<br>• இயேசுவின் சீடர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் தேவை. ஏன்?<br>• ஆவியானவர் வந்தபோது சீஷர்கள் என்ன பார்த்தார்கள்?<br>• முக்கிய வசனத்தை முடிக்க: "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் __________ __________ ஆக்கினார். "(அப்போஸ்தலர் 2: 36) (கதை 1)<br>• ஆலயத்தில் இருந்த மனிதன் ஏன் பணத்திற்காகப் பிச்சை எடுத்தான்?<br>• அவன் எவ்வளவு காலம் நடக்க முடியாமலிருந்தான்?<br>• முக்கிய வசனத்தில் காணாமல் போன வார்த்தைகளை நிரப்பவும்: "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், __________ ________ . "<br>• இந்த அற்புதம் கர்த்தராகிய இயேசுவைப் பற்றி மக்களுக்கு என்ன நிரூபிக்கிறது?<br>• பேதுருவும் யோவானும் ஏன் சிறையில் அடைக்கப்பட்டார்கள்?<br>• நீதிமன்றம் என்ன செய்ய வேண்டும் என்று அவர்களிடம் சொன்னது?<br>• பேதுரு மற்றும் யோவானின் நண்பர்களின் ஜெபத்திற்கு தேவன் பதிலளித்தபோது என்ன நடந்தது? |

## A8 கதை 1

**பேதுரு தொற்காளுக்கு உதவிசெய்கிறார் – இந்தக் கதையானது தொற்காளை மீண்டும் உயிரோடு எழுப்புவதைப் பற்றியதாகும்.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• ஆண்டவராகிய இயேசுவின் வல்லமை பேதுருவின் மூலம் தொற்காளை சுகப்படுத்துவதில் கிரியை செய்தது.<br>• அவரை விசுவாசிப்பதன் மூலம் கர்த்தராகிய இயேசுவுக்கு நாம் பதிலளிக்க வேண்டும்.<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 9: 42**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 9: 32-43** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • நம்மிடம் உள்ளதைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் தேவையிலிருக்கும் மக்களுக்கு உதவக்கூடிய வழிகளைப் பற்றி பேசுங்கள். இதைச் செய்வதற்கான வழிகளை விளக்குவதற்கு சில படங்களைப் பயன்படுத்தலாம்.<br>• கர்த்தராகிய இயேசுவை நேசிக்கும் அன்புள்ள ஒரு பெண்மணியாக தொற்காள் இருந்தாள் என்பதை அறிமுகப்படுத்துங்கள். இதன் காரணமாக, அவள் மற்றவர்களுக்கு உதவிசெய்வதில் நேரத்தை செலவழித்தாள், அவள் தையற்கலையில் கைதேர்ந்தவள் என்பதால் ஏழைகளுக்காக ஆடைகளைச் செய்து கொடுத்தாள். |
| **கற்றுக்கொடுங்கள்** | • ஒரு நாள் தொற்காள் மிகவும் நோய்வாய்ப்பட்டு இறந்தாள். (அப்போஸ்தலர் 9: 37) அவளுடைய தோழிகளுக்கு அது எப்படி இருந்திருக்கும்?<br>• அருகிலுள்ள நகரமான யோப்பாவில் இருந்த பேதுருவைக் காண இரண்டு கிறிஸ்தவர்கள் சென்றனர். (அப்போஸ்தலர் 9: 38,39)<br>• நேரடியாக, பேதுரு தொற்காளின் வீட்டிற்கு சென்றார். (அப்போஸ்தலர்: 9: 40,41) பேதுரு எவ்வாறு முதலில் ஜெபம் செய்துவிட்டு, அவளிடம் பேசி அவளுடையக் கையைப் பிடித்துத் தூக்கிவிட்டு அவள் காலூன்றி நிற்க அவளுக்கு உதவினார் என்பதை விளக்குங்கள். தொர்க்காள் உயிரோடு எழுந்துவிட்டாள்! முதலில் பேதுரு வந்தபோது அவர் கண்ட காட்சியை, இப்போது காணப்படும் மகிழ்ச்சியின் காட்சியோடு ஒப்பிடுக. கர்த்தராகிய இயேசுவின் வல்லமை அவர் மூலமாக செயல்பட்டதால்தான் பேதுருவால் இந்த அற்புதத்தைச் செய்ய முடிந்தது என்பதை வலியுறுத்திச் சொல்லுங்கள்.<br>• அனேகர் கர்த்தராகிய இயேசுவில் விசுவாசம் வைத்தனர். (அப்போஸ்தலர் 9: 42)<br>• தொற்காள் உயிரோடு எழுப்பப்பட்டதைப் பார்த்தவர்கள் விசுவாசித்தது போலவே நாமும் கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்க வேண்டும்.<br>• இதன் எளிமையான அர்த்தத்தை விளக்குங்கள் – அவர் தேவனுடைய குமாரன் என்பதை நாம் உணர வேண்டும், அவர் உயிரோடு இருக்கிறார், அவர் நம்முடைய பாவங்களைப் போக்க வல்லவர். இயேசுவை விசுவாசிப்பது என்றால், நாம் அவரில் முழு நம்பிக்கையையும் வைத்திருக்கிறோம் என்று அர்த்தம்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – தபீத்தாள் என்ற தொற்காள் உயிரோடு எழுப்படுகிறாள். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய அப்போஸ்தலர் 9:42ஐ கற்றுக்கொடுங்கள்.<br>இந்த முக்கிய வசனம் மிகவும் சிறிய பிள்ளைகளுக்குக் கூட எளிதாக இருக்கும். பிள்ளைகள் இதைப் புரிந்துகொண்டார்கள் என்பதை உறுதிசெய்யுங்கள். "அனேகர்" என்ற வார்த்தை யாரைக் குறிக்கிறது என்பதை புரிந்துகொண்டார்களா என்றுப் பாருங்கள். எது அவர்களைக் கர்த்தரை விசுவாசிக்கும்படி செய்தது? நாம் தேவனை விசுவாசிப்பது ஏன் முக்கியமானது? ஒரு நபர் எவ்வாறு கர்த்தரை விசுவாசிக்க முடியும்? |
| **நினைவுகூருங்கள்** | • தொற்காள் எங்கு வாழ்ந்தாள்?<br>• அவள் எவ்வாறு மக்களுக்கு உதவிசெய்தாள்?<br>• அவள் ஏன் மக்களுக்கு உதவினாள்?<br>• தொற்காள் இறந்தபோது மக்கள் எப்படி உணர்ந்தார்கள்?<br>• பேதுருவைக் கண்டுபிடிக்க சென்றது யார்?<br>• தொற்காளின் படுக்கைக்கு அருகே பேதுரு முழங்காற்படியிட்டு என்ன செய்தார்?<br>• தொற்காளிடம் பேதுரு என்ன சொன்னார்?<br>• தொற்காளிடம் பேசிய பிறகு பேதுரு என்ன செய்தார்?<br>• தொற்காள் உயிரோடு எழுந்தபின் பலர் என்ன செய்தார்கள்?<br>• முக்கிய வசனம் எங்குள்ளது? |

## A8 கதை 2

**பேதுரு ஒரு தரிசனத்தைக் காண்கிறார் – தேவன் நம் ஒவ்வொருவர்மேலும் அன்புள்ளவர் என்பதைப் பற்றியதே இந்தக் கதை.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• பேதுரு தேவன் சொன்னதைச் செய்ததின் மூலம் அவருக்குக் கீழ்ப்படிந்தார்.<br>• தேவன் எல்லோரையும் நேசிக்கிறார், எல்லோரும் கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அறியவேண்டும் என விரும்புகிறார்.<br>**முக்கிய வசனம்: யோவான் 3: 16**<br>**வேதப்பகுதி:** அப்போஸ்தலர் 10: 9-23 |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • பல்வேறு நாடுகளிலிருக்கும் மக்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு வேறுபடுகிறார்கள் என்பதைப் பற்றிப் பேசுங்கள் – புகைப்படங்கள் அல்லது படங்கள் இருந்தால் அவற்றைப் பயன்படுத்துங்கள்.<br>• தோலின் நிறம், முடி, ஆடை, மொழி முதலியவற்றில் காணும் வித்தியாசத்தைப் பற்றி பேசவும்.<br>• நம் எல்லோரையும் படைத்தவர் தேவன். ஒவ்வொரு தனிநபரும் தம்மைப் பற்றியும் தமது குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவைப் பற்றியும் அறிந்துகொள்ளவேண்டும் என விரும்புகிறார். |
| **கற்றுக்கொடுங்கள்** | • யோப்பாவில் பேதுரு ஜெபித்துகொண்டிருந்தார். (A8 கதை 1-உடன் தொடர்புபடுத்துங்கள்) தாம் எல்லோரையும் நேசிக்கிறார் என்பதை தேவன் பேதுருவுக்குக் கற்றுத்தந்தார். (அப்போஸ்தலர் 10:9-16) இந்த தரிசனத்தின் விவரத்தைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இந்த உண்மையைப் புரிந்துகொள்வது பேதுருவுக்கு கடினமாக இருந்தது என்பதை நிலை 2ல் இருக்கும் பிள்ளைகளுக்கு விளக்கலாம். ஏனென்றால், அவர் யூதராக இருந்தபடியால், யூதர்களே தேவனுக்கு முக்கியமானவர்கள் என்று அவர் அதுவரையிலும் நினைத்துக்கொண்டிருந்தார். எல்லோரும் தேவனுக்கு விசேஷமானவர்கள் என்பதை பேதுரு கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.<br>• அவரைச் சந்திக்க மூன்றுபேர் வந்தார்கள், அவர்கள் பேதுருவைக் கொர்நேலியுவின் வீட்டிற்கு வரும்படி அழைத்தனர். (அப்போஸ்தலர் 10: 17-22) கொர்நேலியு ஒரு முக்கியமான ரோம இராணுவவீரராய் இருந்தார் என்பதையும், அவர் தேவனைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள ஆர்வமாக இருந்தார் என்பதையும் விளக்கிக் கூறுங்கள். கொர்னேலியு பேதுருவிலிருந்து வித்தியாசமானவர், பேதுருவும் கொர்நேலியுவைப் போன்ற ஒருவரைப் பார்க்க போயிருக்கமாட்டார். (1) தேவன் அவருக்குக் கற்றுக்கொடுத்ததிலிருந்தும் (2) பரிசுத்த ஆவியானவர் அவரை வழிநடத்துவதிலிருந்தும், தான் சென்றது சரியான செயல் என்பது பேதுருவுக்கு நன்றாகத் தெரியும் என்பதை விளக்கிக் கூறுங்கள்.<br>• (40 மைல்கள் தொலைவில்) செசரியாவிலிருந்த கொர்நேலியுவின் வீட்டுக்கு பேதுரு சென்றார். (அப்போஸ்தலர் 10: 23) தூரத்தை ஒப்பிட்டுவது பிள்ளைகளுக்கு நன்கு தெரிந்திருந்தால் இந்த தூரத்தைப் பற்றி சில குறிப்புகளை வழங்க முயற்சிக்கவும். இந்தப் பயணத்திற்கு ஒரு முழு நாளே எடுத்திருக்கும். இந்தப் பயணத்தை மேற்கொண்டதால் தேவனிடத்தில் பேதுருவுக்கிருந்த கீழ்ப்படிதலைக் கவனியுங்கள்.<br>• தேவன் தங்களை நேசிக்கிறார் என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை வலியுறுத்துங்கள். எல்லாரும் மன்னிக்கப்படுவதற்காக அவர் தம்முடைய குமாரனை சிலுவையில் மரிக்க ஒப்புக்கொடுத்தார்.<br>• கர்த்தராகிய இயேசுவை ஏற்கனவே நீங்கள் விசுவாசித்திருந்தால், மற்றவர்கள் அவரைப் பற்றி தெரிந்துகொள்ள உதவலாமே.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – கொர்நேலியுவுக்கு பேதுரு இயேசுவைப் பற்றிக் கூறுகிறார். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய யோவான் 3:16ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • பேதுரு யாரிடத்தில் தங்கியிருந்தார்?<br>• மத்தியான வேளையில் பேதுரு என்ன செய்துகொண்டிருந்தார்?<br>• தேவன் பேதுருவிடம் பேசியபோது பேதுரு என்ன அறிந்துகொள்ளவேண்டும் என தேவன் விரும்பினார்?<br>• பேதுருவைப் பார்க்க எத்தனை ஆட்கள் வந்தார்கள்?<br>• பேதுரு யாரை சந்திக்க வந்தார்?<br>• கொர்நேலியு அப்பொழுது என்ன செய்துகொண்டிருந்தார்?<br>• பேதுரு கொர்நேலியுவின் வீட்டிற்கு ஏன் சென்றார்?<br>• உலகிலுள்ள அனைவரையும் தாம் நேசிப்பதை தேவன் எப்படி வெளிப்படுத்தினார்?<br>நடித்துக்காட்டுங்கள்: சந்திக்க வந்தவர்களின் வருகைத் தொடங்கும் கதையின் பகுதியை நடித்துக்காட்டி கதை 3ல் அதைத் தொடரலாம். வயதுவந்த தலைவர்கள் பார்வையாளர்களாகவும் பேதுருவாகவும் நடிக்கலாம். |

## A8 கதை 3

**பேதுருவும் கொர்நேலியுவும் - இந்தக் கதை தேவன் ஒரு ரோம இராணுவ அதிகாரியை இரட்சிப்பதைப் பற்றியதாகும்.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• இயேசுவை நம்பின யூதரல்லாத (புறஜாதி) முதல் மனிதர் கொர்நேலியு ஆவார், இது எப்படி நடந்தது?<br>• தம்மீது நம்பிக்கைவைக்கும் எவருடைய பாவங்களையும் மன்னிக்க தேவன் தயாராக இருக்கிறார்.<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 10: 43**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 10: 23-48** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • இது கடந்த வாரக் கதையின் தொடர்ச்சியாக இருப்பதால், விவரங்களை மீண்டும் நினைவுபடுத்த கதை 2ல் உள்ள வினாடி வினாக்களில் சிலவற்றை இங்கேப் பயன்படுத்துவது பொருத்தமாக இருக்கும்.<br>• இதைச் செய்தபிறகு, செய்தியைக் கேட்பதற்காக மக்களை ஒன்றாகக் கூடச் செய்கிற சில முக்கியமான நிகழ்வுகள் உங்கள் சமூகத்தில் இருக்கலாம், அவற்றை நீங்கள் குழந்தைகளுக்கு ஒரு உதாரணமாக எடுத்துக் கூறலாம். |
| **கற்றுக்கொடுங்கள்** | • கொர்நேலியுவின் வீட்டிற்கு பேதுரு வந்துசேர்ந்தார். (அப்போஸ்தலர் 10: 24-33) பிள்ளைகள் இக்காட்சியை படமாக வரைய உதவுங்கள் - பேதுருவைக் காண ஆவலாய் இருந்ததால் குடும்பத்தாராலும் நண்பர்களாலும் கொர்நேலியுவின் வீட்டில் கூட்டம் நிரம்பி வழிந்தது. கொர்நேலியு பேதுருவை மிகவும் விசேஷித்த விருந்தினராகக் கருதினார், எனவே அவர் அவருக்கு முன்பாக வணங்கினார்! ஒரு சாதாரண மனிதனை வணங்குவது சரியல்ல என்பதால் பேதுரு அவரை எழுந்திருக்கும்படி சொன்னார். பேதுருவை அழைத்துவரும்படி தேவன் தன்னிடத்தில் சொல்லியிருந்ததை கொர்நேலியு விளக்கினார். இந்தச் சந்திப்பிற்காக தேவன் அவர்கள் இருவரையும் ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார் என்பதை நீங்கள் சுட்டிக்காட்ட விரும்பலாம்!<br>• பேதுருவின் செய்தி. (அப்போஸ்தலர் 10: 34-43) எல்லா தேசத்து மக்களும் தம்மை விசுவாசிக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார் என்று பேதுரு சொன்னதை விளக்குங்கள்.<br>• கர்த்தராகிய இயேசுவைப் பற்றி அவர் சொன்ன உண்மைகளைப் பற்றி பேசுங்கள் - எப்படி அவர் நல்ல செயல்களை செய்தார், மக்களைக் குணமாக்கினார், கொல்லப்பட்டு தேவனால் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் ஆகியவை. கர்த்தராகிய இயேசு ஒரு நாள் நீதிபதியாய் இருப்பார், ஆனால் மிக முக்கியமாக இப்போது அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு அவர் பாவமன்னிப்பை அளிக்கிறார்.<br>• கேட்போரின் பதில். (அப்போஸ்தலர் 10: 44-48) பேதுரு சொன்னதை அவர்கள் புரிந்துகொள்ள பரிசுத்த ஆவியானவர் உதவிசெய்தார். அவர்கள் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள், அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன.<br>• இந்த மக்களைப் போலவே, நாமும் கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கேட்கும்போது அவருக்குச் செவிசாய்க்க வேண்டும். அவரை விசுவாசிப்பதன் மூலம் நம் பாவங்கள் மன்னிக்கப்பட முடியும்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: **FBI** - கொர்நேலியுவுக்கு பேதுரு இயேசுவைப் பற்றிக் கூறுகிறார். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய அப்போஸ்தலர் 10:43ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். “எவரேனும்” (யாராகிலும்) மற்றும் “செலுத்தித் தீர்த்தல்” (மன்னிப்பு) என்ற வார்த்தைகளின் பொருளை விளக்குங்கள். |
| **நினைவுகூருங்கள்** | மேலும் வினாடி வினா கேள்விகள் கேட்பதற்குப் பதிலாக, முக்கிய வசனத்தைப் பெரிய எழுத்தில் எழுதி, அதைச் சுற்றிலும் இருக்கும்படி முகங்களை ஒட்டி ஒரு படத்தொகுப்பினை உருவாக்குவது நல்ல யோசனை என்றுத் தோன்றுகிறது. ஒவ்வொரு குழந்தையும் தனது முகத்தை வரையட்டும். இது, தேவனின் அன்பைப் பற்றிப் பேதுருக் கற்றுக்கொண்ட உண்மையை வலியுறுத்தவும், “யாரெல்லாம்“ என்பதில் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு பிள்ளையும் உள்ளடங்கியிருக்கிறார்கள் என்பதையும் புரிந்துகொள்ள உதவும். மாற்றுத்திறன்கொண்ட குழந்தைகளாக இருந்தால் பழைய இதழ்களிலிருந்து வேறுபட்ட முகங்களை வெட்டி எடுக்கலாம்.<br>நடித்துக்காட்டுங்கள்: கதை 2ல் பரிந்துரைத்தபடி, இதை நடித்துக்காட்டலாம். |

## A8 கதை 4

**பேதுரு மீட்கப்படுகிறார் - இந்தக் கதை தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறார் என்பதைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• பேதுருவின் நண்பர்கள் அவருக்காக ஜெபித்தார்கள்.<br>• நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிப்பதற்காக தேவன் அற்புதமான காரியங்களை தேர்ந்தெடுக்கலாம்.<br>**முக்கிய வசனம்: யாக்கோபு 5: 16**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 12: 1-19** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • நமது நண்பர்களிடம் பேசுவதற்கு அல்லது ஒருவரின் உதவியைக் கேட்பதற்கு தொலைபேசிகளைப் பயன்படுத்துவதைப் பற்றி பேசுங்கள். முடிந்தால் ஒரு மொபைல் ஃபோனை காட்டி விளக்கலாம்.<br>• தேவனிடம் பேசுவதே ஜெபம் என்ற கருத்தை மீளாய்வு செய்யவும். தேவன் நம்மிடம் பதிலுக்குப் பேசுவதில்லை, ஆனால் நாம் பேசுவதை அவர் எப்போதும் கவனித்துக் கேட்கிறார். நம் ஜெபங்களுக்கு பதிலளிக்கும் வல்லமை அவருக்கு இருக்கிறது.<br>• இன்றையக் கதையில், நண்பர்கள் குழுவாக சேர்ந்து ஒரு முக்கியமான விஷயத்திற்காக ஜெபம்செய்தனர். |
| **கற்றுக்கொடுங்கள்** | • சிறையில் பேதுரு. (அப்போஸ்தலர் 12: 1-4) ஏரோது ராஜா இயேசுவைப் பின்பற்றுகிறவர்களை வெறுத்தான். யாக்கோபு கொலைசெய்யப்பட்டார். பிறகு வெகு விரைவில் பேதுரு கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதேபோல் முன்பு ஒருமுறை பேதுருவுக்கு நிகழ்ந்ததை நினைவுகூருங்கள். (அப்போஸ்தலர் 5: A 7 / கதை 3)<br>• பேதுருவின் நண்பர்களின் ஜெபங்கள். (அப்போஸ்தலர் 12: 5) ஏன் இதுவே செய்யத் தக்க சிறந்த செயல் என்பதை விவாதிக்கவும்.<br>• சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். (அப்போஸ்தலர் 12: 6-10) அது நடந்தது பேதுருவின் விசாரணைக்கு முந்தைய இரவு (இந்த விசாரணைகளின் முடிவு எவ்வளவு முக்கியமானது என்பதை விளக்குங்கள்). பேதுரு இரண்டு சிப்பாய்களோடு சங்கிலியால் பிணைக்கப்பட்டார், சீக்கிரமே அயர்ந்து தூங்கினார். ஏராளமான நாடகங்களுக்குப் பிறகு தேவதூதன் பேதுருவை எவ்வாறு காப்பாற்றினார் என்ற விவரத்தை கவனத்தை ஈர்க்கும் வகையிலும், நடந்த சம்பவத்தில் ஆச்சரியத்தை வெளிப்படுத்தும் வகையிலும் விளக்குங்கள். தான் கனவு கண்பதாகத்தான் பேதுரு நினைத்தார்.<br>• நண்பர்களின் வீட்டில் பேதுரு. பேதுரு தெருவில் வெளியே வந்தபோதுதான், தேவன் தன்னை விடுவித்தார் என்பதை உணர்ந்தார். பேதுரு இப்போது எப்படி உணருவார்? நேராக அவர் தனது நண்பர்களிருக்கும் வீட்டிற்குச் சென்றார். (அப்போஸ்தலர் 12: 11-17) அவர் கதவைத் தட்டியபோது ரோதை யாரென விசாரிக்க வந்தாள், அதற்கு அவர்களின் எதிர்ச் செயல் என்னவாக இருந்தது. அவர்கள் ஆச்சரியப்பட்டிருப்பார்களா?<br>• நாம் தேவனிடத்தில் ஜெபிக்கக் கூடிய சூழ்நிலைகள் பற்றி விவாதிக்கவும். தேவன் நம் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் எப்போதும் கேட்கிறார், தமக்கு சிறந்ததாகத் தோன்றும் வழியில் அவைகளுக்கு பதிலளிப்பார்.<br>• நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிக்கும்போது தேவனுக்கு நன்றி செலுத்தவும் அவரைத் துதிக்கவும் வேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI - சிறைச்சாலையிலிருந்து பேதுரு அற்புதமாய் தப்பிச்செல்லுதல். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய யாக்கோபு 5:16ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். நம்முடைய ஜெபங்களால் உண்மையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும் என இந்த வசனம் நமக்குச் சொல்கிறது. தேவன் அவரது பணியைச் செய்ய நமது ஜெபங்களைப் பயன்படுத்துகிறார். |
| **நினைவுகூருங்கள்** | • பேதுருவை சிறையில் அடைத்தவர் யார்?<br>• ஏரோது ராஜா ஏற்கனவே யாரைக் கொலைசெய்தான்?<br>• தேவன் ஒரு தேவதூதனை அனுப்பியபோது பேதுரு என்ன செய்துகொண்டிருந்தார்?<br>• பேதுருவின் நண்பர்கள் ஏன் கூடிவந்திருந்தார்கள்?<br>• என்ன செய்யும்படி தேவதூதன் பேதுருவிடம் சொன்னான்?<br>• சிறைச்சாலையின் வாயில் வழியாக பேதுரு எப்படிச் சென்றார்?<br>• பிரிந்துபோவதற்கு முன் தேவதூதன் பேதுருவுடன் எதுவரை நடந்தான்?<br>• யாருடைய வீட்டிற்கு அவர் சென்றார்?<br>• கதவினருகில் பேதுருவைக் கண்டது யார்?<br>• ரோதை முதலில் ஏன் கதவைத் திறக்கவில்லை?<br>நடித்துக்காட்டுங்கள்: பேதுரு சிறைச்சாலையைவிட்டு வெளியேறுகிற பகுதியை, ஒரு குழந்தை பேதுருவாகவும் மற்றொன்று தேவதூதனாகவும் ஜோடியாக நடிக்கலாம்.<br>குழந்தைகள் பின்பற்றுவதற்காக, வயதுவந்தோர் நடிப்போடுகூடிய விளக்கத்தை அளிக்கலாம். |

## A9 கதை 1

**யாக்கோபு தன் சகோதரனை வஞ்சிக்கிறார் – இந்தக் கதை சுயநலமாக இருப்பதைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• சுயநலமாக இருப்பது என்பதின் அர்த்தம் என்னவென்றால், மற்றவர்களுக்குத் தொந்தரவாக இருந்தாலும்கூட, உங்களை முதன்மையாக வைப்பது என்பதாகும்.<br>• யாக்கோபைப் போலவை நாமும் சுயநலமுள்ளவர்களாய் இருக்க முடியும், ஆனால் அது தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வதாகும்.<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 25: 28 அல்லது பிலிப்பியர் 2: 3**<br>**வேதப்பகுதி: ஆதியாகமம் 25: 19–34** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • ஏதாவது ஒரு இரட்டையர்களை உங்களுக்குத் தெரியுமா? ஆளுமையிலும் தோற்றத்திலும் அவர்கள் வித்தியாசமாக இருக்கிறார்களா அல்லது ஒரேமாதிரி இருக்கிறார்களா? உங்கள் சகோதரர்கள், சகோதரிகளோடு நீங்கள் எப்போதாவது சண்டைப்போடுவதுண்டா?<br>• சுயநலமாக இருத்தல் என்றால் என்ன அர்த்தம்? உங்களுக்குத் தெரிந்த ஒருவர் சுயநலமாக நடந்துகொண்டால், அது உங்கள் மனதைப் புண்படுத்தினதை நினைத்துப்பார்க்க முடிகிறதா?<br>• ஒத்துப்போகாத இரண்டு சகோதரர்களைப் பற்றியதே இந்தக் கதை. அவர்களில் ஒருவன் தன்னைப் பற்றி மட்டுமே சிந்தித்து, தன்னுடைய சகோதரனை ஏமாற்றிவிட்டான். |
| **கற்றுக்கொடுங்கள்** | • ஈசாக்கும் ரெபேக்காளும் இரட்டையர்கள் பிறக்க எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இரட்டையர்கள் பிறப்பதற்கு முன்னரே, அவளுடைய மூத்த மகன் இளைய மகனுக்கு சேவை செய்வான் என தேவன் ரெபெக்காளிடம் சொல்லியிருந்தார். (ஆதியாகமம் 25:19–23)<br>• இரட்டையர்கள் பிறந்தபோது, அவர்கள் மிகவும் வித்தியாசமாக இருந்தார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. மூத்த மகன், ஏசா, மிகவும் ரோமமுள்ளவனாக இருந்தான், ஆனால் அவனுடைய சகோதரன் யாக்கோபு மென்மையான தோலைக் கொண்டிருந்தான். (ஆதியாகமம் 25: 24–26) அவர்கள் வித்தியாசமான விஷயங்களை அனுபவித்தனர் – ஏசா ஒரு நல்ல வேட்டைக்காரன் ஆனான், ஆனால் யாக்கோபு வீட்டிலேயே இருக்க விரும்பினான். தாய்க்கு ஒரு மகனையும் தந்தைக்கு ஒரு மகனையும் பிடித்திருந்தது. ஈசாக்கு ஏசாவை நேசித்தான், ஆனால் ரெபெக்காள் யாக்கோபை நேசித்தாள். (ஆதியாகமம் 25: 27–28)<br>• ஒரு நாள், யாக்கோபு கூழ்க் காய்ச்சினான். ஏசா வேட்டையாடுவதற்காக வெளியே சென்றிருந்தான். பிள்ளைகள் இக்காட்சியை கற்பனை செய்துபார்க்க உதவுங்கள் – ஏசா சோர்வாகவும், மிகவும் பசியாகவும் இருக்கும்போது சுவையான கூழின் வாசனை! ஏசாவுக்கு இப்போது அதில் கொஞ்சமாவது சாப்பிட்டே ஆக வேண்டும்! ஆனாலும் யாக்கோபு மிகவும் தந்திரசாலியாய் இருந்தான். ஏசா சேஷ்டபுத்திரபாகத்தைத் தனக்குக் கொடுத்தால் மட்டுமே கூழைக் கொடுப்பதாக யாக்கோபு உடனே கூறினான்.<br>சேஷ்டபுத்திரபாகத்தை விளக்குங்கள். வழக்கமாக குடும்பத்தில் மூத்த மகனுக்குத்தான் சேஷ்டபுத்திரபாகம் கொடுக்கப்பட்டது. இதன் பொருள் தந்தை இறக்கும்போது அவன் குடும்பத்தின் தலைவனாவான். மேலும் தனது தந்தையின் சொத்தில் இரண்டு பகுதியைப் பெறுவான்.<br>• பசி மிகவும் வாட்டியதால், ஏசா சிறிதளவும் யோசிக்கவில்லை! தன் சகோதரன் தன்னை ஏமாற்ற அனுமதித்து, தனது சேஷ்டபுத்திரபாகத்தை சிறிது கூழுக்காக விற்றுப்போட்டான். (ஆதியாகமம் 25: 29–34)<br>இரண்டு மகன்களின் செயல்களைப் பற்றியும் விவாதிக்கவும். யாக்கோபு ஏசாவின் சேஷ்டபுத்திரபாகத்தை ஏமாற்றிப் பெற்றது சரியா? ஏசா தனது விலையுயர்ந்த சேஷ்டபுத்திரபாகத்தை வெறும் ஒரு கோப்பைக் கூழுக்காக விற்க சம்மதித்திருக்கலாமா?<br>• தேவன் யாக்கோபினிடத்திலும் ஏசாவினிடத்திலும் பிரியமாயிருந்தார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?<br>• சில நேரங்களில், ஏசாவையும் யாக்கோபையும் போலவே, நாமும் நமக்கு வேண்டியதைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறோம். நாம் சுயநலத்தோடு இருக்கும்போது, தேவனுக்கு எதிராகப் பாவம் செய்கிறோம்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: bibleforchildren.org - Jacob. FBI – ஏசா தனது சேஷ்டபுத்திரபாகத்தை யாக்கோபுக்கு விற்கிறான். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய ஆதியாகமம் 25: 28 அல்லது பிலிப்பியர் 2: 3ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • இந்தக் கதையில் வரும் இரண்டு பையன்களின் பெயர்கள் யாவை?<br>• மூத்த மகன் யார்?<br>• இரண்டு பையன்களும் வித்தியாசமாக இருந்தனர் என்பதற்கு இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுங்கள்.<br>• சேஷ்டபுத்திரபாகம் என்றால் என்ன?<br>• சேஷ்டபுத்திரபாகம் தனக்கு வேண்டும் என யாக்கோபு விரும்பியதற்கு காரணம் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?<br>• யாக்கோபு ஏசாவை எப்படி ஏமாற்றினான்?<br>• இந்தக் கதையிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ள முடிகிறது? |

## A9 கதை 2

**யாக்கோபு தன் தகப்பனை ஏமாற்றுகிறார் – இந்தக் கதை யாக்கோபு எவ்வாறு ஏமாற்றினார் என்பதைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• ரெபெக்காளும் யாக்கோபும் ஈசாக்கை ஏமாற்ற விரும்பினார்.<br>• ஏமாற்றுவது, பொய் சொல்வது என்பது தேவனுடைய பார்வையில் தவறானது.<br>**முக்கிய வசனம்:ஆதியாகமம் 27: 20 அல்லது சங்கீதம் 32:2**<br>**வேதப்பகுதி: ஆதியாகமம் 27: 1-29** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • பொய்சொல்லது என்றால் என்ன அர்த்தம்?<br>• இந்தக் கதையில் யாக்கோபு தனது தந்தையிடம் பொய் சொல்கிறான். அவனது பொய்கள் அவன் தந்தைக்கும் சகோதரனுக்கும் மிகவும் தீங்கு விளைவிக்கிறது.<br>• யாரோ ஒருவர் பொய்யைச் சொன்னதால் அது வேறு நபரைக் காயப்படுத்திவிட்டது என்பதற்கு வேறு எந்தக் கதையாவது உங்கள் நினைவுக்கு வருகிறதா? |
| **கற்றுக்கொடுங்கள்** | • இப்போது ஈசாக்கு வயதாகி பார்வையற்றவராய் இருந்தார். அவர் இறப்பதற்கு முன்பு, தன்னுடைய மூத்த மகனாகிய ஏசாவை ஆசீர்வதிக்க விரும்பினார். ஒரு சிறப்பான உணவைத் தயாரிக்கும்படி ஏசாவைக் கேட்டுக்கொண்டார். (ஆதியாகமம் 27: 1-4) விவிலிய காலக்கட்டத்தில் ஒரு தகப்பன் இறப்பதற்கு முன் தன் மூத்த மகனை ஆசீர்வதிப்பார் என்பதை விளக்கிக் கூறுங்கள்.<br>• ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிக்கப்போகிறார் என்றுக் கூறியதை ரெபெக்காள் ஒட்டுக்கேட்டாள். ஏசாவை ஆசீர்வதிப்பதற்குப் பதிலாக ஏமாற்றி யாக்கோபை ஆசீர்வதிக்கும்படி அவளும் யாக்கோபும் ஒரு திட்டத்தைத் தீட்டினர். எனவே ரெபெக்காள் ஒரு சிறப்பு உணவைச் சமைத்து, அவன் ஏசாவைப்போல ரோமமுள்ளவனாகக் காணப்படுவதற்காக, யாக்கோபின் கைகளை வெள்ளாட்டுத் தோலினால் மூடினாள். (ஆதியாகமம் 27: 5-17) பெற்றோரில் ஒவ்வொருவருக்கும் ஒரு மகனைப் பிடித்திருந்தது என்பதைப் பிள்ளைக்கு நினைப்பூட்டுங்கள். ரெபெக்காளுக்குப் பிடித்த மகன் யாக்கோபு, ஈசாக்குக்குப் பிடித்த மகன் ஏசா. அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு விருப்பமான மகனுக்கு ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும் என விரும்பினர். பாரபட்சம் காண்பிப்பது நியாயமற்றது என்பதை பிள்ளைகள் அறிவதற்காக, ஒரு வீட்டிலோ அல்லது பாடசாலையிலோ பாரபட்சம் காண்பிக்கும் சூழ்நிலைகளை எடுத்துக்காட்டுங்கள்!<br>• யாக்கோபு ஈசாக்கிற்கு சிறப்பு உணவைக் கொண்டுவந்தான். அவன் ஈசாக்கிடம் பொய்ச் சொல்லி தான் ஏசா என்று நடித்தான். ஏசாவுக்கு இந்த ருசியான உணவு இவ்வளவு சீக்கிரத்தில் எப்படிக் கிடைத்தது என்று ஈசாக்குக்கு ஆச்சரியமாக இருந்தது. (ஆதியாகமம் 27: 18-20). ரெபெக்காளும் யாக்கோபும் தேவனைப் பிரியப்படுத்தினதாக நீங்கள் நினைக்கிறீர்களா? ஏன்/ஏன் இல்லை?<br>• ஈசாக்குக்கு இன்னும் சந்தேகமாக இருந்தது. இது உண்மையில் ஏசாதானா? என்பதை அவர் உறுதிசெய்யவேண்டும் என்று விரும்பினார், எனவேதான் யாக்கோபின் கைகளில் முடி இருக்கிறதா எனத் தான் தொட்டுப்பார்க்கட்டும் என்றார். ஆமாம் ... கைகள் ஏசாவுடைய கைகளைப் போல காணப்பட்டன, ஆனால் குரலோ யாக்கோபுடையதைப் போல இருந்தது. ஈசாக்கு குழப்பமடைந்தார். எனவே, நான் ஏசாதான் என்று யாக்கோபு மீண்டும் பொய் சொன்னான். (ஆதியாகமம் 27: 21-24)<br>• ஈசாக்கு யாக்கோபு கொண்டுவந்திருந்ததை சாப்பிட்டார். அவர் சாப்பிட்டு முடிந்ததும், தான் ஏசாவை ஆசீர்வதிப்பதாக நினைத்துக்கொண்டு யாக்கோபை ஆசீர்வதித்தார். (ஆதியாகமம் 27: 25-29) தன்னிடம் பொய் சொன்னதை உணர்ந்தபோது ஈசாக்குக்கு எப்படி இருந்திருக்கும்?<br>• பொய் சொல்லக்கூடாது என தேவன் நமக்குக் கட்டளையிட்டது ஏன் என்று நினைக்கிறீர்கள்?<br>• கர்த்தராகிய இயேசுவின் முன்மாதிரியைக் கவனியுங்கள்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: bibleforchildren.org - Jacob. FBI - யாக்கோபு ஏசாவை வஞ்சிக்கிறான். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய ஆதியாகமம் 27: 20 அல்லது சங்கீதம் 32: 2ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • ஈசாக்குக்குப் பிரியமான மகன் யார்?<br>• ரெபெக்காளுக்கு பிரியமான மகன் யார்?<br>• ஈசாக்கு இறப்பதற்கு முன் ஏசாவுக்கு என்ன செய்யவிருந்தார்?<br>• ஏசா ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும் என ரெபெக்காள் விரும்பினாளா? ஏன் விரும்பவில்லை?<br>• யாக்கோபும் ரெபெக்காளும் ஈசாக்கை எவ்வாறு ஏமாற்றினார்கள்?<br>• உண்மையில் வந்தது யாக்கோபு என ஏசாவால் ஏன் அறியமுடியவில்லை?<br>• இந்தக் கதையில் யாக்கோபும் ரெபெக்காளும் தேவனுக்குப் பிரியமாக நடந்துகொண்டார் என நீங்கள் நினைக்கிறீர்களா? ஏன் இல்லை? |

## A9 கதை 3

**யாக்கோபு தேவனைச் சந்திக்கிறார் – இந்தக் கதை தேவனுடைய அக்கறையைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• நாம் தேவனை நம்பலாம், ஏனென்றால் அவர் எப்போதும் அவருடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார்.<br>• தேவன் நம்மை விசாரித்து அக்கறை காட்டுகிறார்.<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 28: 16 அல்லது சங்கீதம் 86: 11**<br>**வேதப்பகுதி: ஆதியாகமம் 28: 1–22** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • முந்தைய கதையில் யாக்கோபு ஏசாவை எப்படி ஏமாற்றினான் என்பதைப் பிள்ளைகள் நினைவில் வையுங்கள். ஏசா மிகவும் கோபமடைந்து, யாக்கோபைக் கொல்லத் திட்டமிட்டம் போட்டுக்கொண்டிருந்தான். யாக்கோபு சிறிது காலத்திற்கு வீட்டைவிட்டு வெளியேற முடிவு செய்தான்.<br>• பிள்ளைகள் தங்களை யாக்கோபு என்று கற்பனை செய்யும்படி அவர்களிடம் கூறுங்கள். இதைப் போன்று அவர்கள் வீட்டைவிட்டு வெளியேறினால், அவர்களுக்கு எப்படியிருக்கும்?<br>• யாக்கோபு தவறான காரியங்களை செய்தபோதிலும், தேவன் இன்னும் அக்கறை காட்டி, அவனை நேசித்தார் என்று பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறுங்கள். யாக்கோபுக்கு தேவன் தம்மை எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதை இன்றையக் கதை நமக்கு சொல்கிறது. |
| **கற்றுக்கொடுங்கள்** | • ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து, வீட்டைவிட்டு வெளியேறும்படி சொல்லி, ஆரானிலிருக்கும் அவனது மாமாவான லாபானின் குடும்பத்தாரிடம் போகும்படி அவனை அறிவுறுத்தினார். அங்கு, அவன் தனக்கு ஒரு மனைவியைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. (28: 1–5)<br>• பயணத்தின்போது, யாக்கோபு இரவில் தங்கி ஓய்வெடுத்தான். அவன் ஒரு கல்லைத் தலையணையாகப் பயன்படுத்தினான். இது எவ்வாறு இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்! அவன் தூங்கும்போது, கனவில் பூமியிலிருந்து வானத்தைத் தொட்டுக்கொண்டிருக்கும் ஒரு ஏணியைக் கண்டான். தேவதூதர்கள் ஏறி இறங்கிக்கொண்டிருந்தார்கள். (28: 10–12)<br>• ஏணியின் உச்சியில் தேவன் நின்றுகொண்டிருந்தார். உன்னை ஆசீர்வதித்து உனக்கு பல சந்ததியினரைக் கொடுப்பேன் என்று யாக்கோபிடம் கூறினார். யாக்கோபுடன் கூட இருப்பதாக தேவன் உறுதியளித்தார். ஒரு நாள் தேவன் யாக்கோபை மறுபடியும் வீட்டிற்குக் கொண்டுவருவார். (28: 13–15) வாக்குத்தத்தம் என்றால் என்னவென்று விவாதிக்கவும். நாம் எப்போதும் நம்முடைய வாக்குறுதிகளை காப்பாற்றுகிறோமா? ஏன் இல்லை? தேவன் எப்போதும் அவருடைய வாக்குத்தத்தங்களைக் காப்பாற்றுகிறார் என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்குங்கள். அவர் சர்வவல்லமையுள்ளவர், அவர் பொய் சொல்லாதவர்.<br>• யாக்கோபு விழித்தெழுந்தபோது, தேவன் அந்த இடத்தில் இருந்ததை அறிந்தான். தன்னுடன் தேவன் இருந்தார் என்பதை நினைத்தபோது யாக்கோபு எவ்வளவு பயவுணர்வோடு இருந்திருப்பான் என்பதை விளக்குங்கள். தேவனுக்குப் பிரியமில்லாத அனேக விஷயங்களை யாக்கோபு செய்திருந்தான். ஆனால் தேவன் இன்னும் அவன்மீது அக்கறை காட்டினார்! பிறகு தான் தலையணையாகப் பயன்படுத்திய கல்லை எடுத்து, அதன்மீது எண்ணெய் ஊற்றினான். அந்த இடத்தை பெத்தேல் என்று அழைத்தான். கர்த்தர் தன்னோடு இருந்து, தன்னை மீண்டும் வீட்டிற்கு அழைத்துவந்தால், கர்த்தர் தன்னுடைய தேவனாயிருப்பார் என்று யாக்கோபு வாக்குறுதிக் கொடுத்தான். (28: 16–22) தேவன் தமது வாக்குறுதிகளை எப்போதும் நிறைவேற்றுகிறார் என்பதை யாக்கோபு இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது!<br>• நாமும் யாக்கோபைப் போல் இருக்கிறோம், ஏனென்றால் நாமும் தவறான காரியங்களைச் செய்திருக்கிறோம். தேவன் யாக்கோபை நேசித்தது போலவே, நம் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார், நம்மீது அக்கறை காட்டுகிறார். அவர் தம்முடைய குமாரனை நமக்காகச் சிலுவையில் மரிக்கும்படி அனுப்பினார் என்பதை விளக்குங்கள். நம்மை தேவனிடம் கொண்டுவருவதன் மூலமும், நம்மைப் பரலோக வீட்டிற்கு கொண்டுசெல்வதன் மூலமும் கர்த்தராகிய இயேசு நமக்கு ஒரு ஏணியாக இருக்கிறார்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காணபியுங்கள்: bibleforchildren.org - Jacob. FBI – தேவன் யாக்கோபோடு கனவில் பேசுகிறார். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய ஆதியாகமம் 28: 16 அல்லது சங்கீதம் 86: 11ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • யாக்கோபு ஏன் வீட்டைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று?<br>• யாக்கோபு தலையணையாக எதைப் பயன்படுத்தினான்?<br>• யாக்கோபு தனது கனவில் என்னப் பார்த்தான்?<br>• யாக்கோபின் கனவில் தேவன் என்னக் கூறினார்?<br>• கடந்தகாலத்தில் யாக்கோபு தவறு செய்திருந்திருந்தபோதிலும், தேவன் அவனைப் பராமரித்தாரா?<br>• தேவன் நம்மீது அக்கறையுள்ளவராய் இருக்கிறார் என்பதை நாம் எவ்வாறு அறிகிறோம்?<br>• யாக்கோபு அந்தக் கல்லிற்கு என்ன செய்தான்?<br>• கர்த்தராகிய இயேசு எவ்வாறு ஒரு ஏணியாகத் திகழ்கிறார்? |

## A9 கதை 4

**யாக்கோபு ஒரு மனைவியைக் கண்டுபிடிக்கிறார் - இந்தக் கதை யாக்கோபு தன் மாமனாரால் எவ்வாறு நடத்தப்பட்டார் என்பதே.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• ஏமாற்றுக்காரனாகிய யாக்கோபு, தானும் ஏமாற்றப்பட்டான்.<br>• மற்றவர்கள் எவ்வாறு நம்மை நடத்தவேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அவ்வாறோ நாமும் மற்றவர்களை நடத்த வேண்டும்.<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 29: 28 அல்லது கலாத்தியர் 6: 7**<br>**வேதப்பகுதி: ஆதியாகமம் 29: 1-30** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • நீங்கள் ஒருபோதும் சந்தித்திராத ஒரு குடும்பத்தில் தங்குவதற்காகப் போயிருந்தீர்களா? அப்பொழுது உங்களுக்கு எப்படி இருந்தது? அல்லது ஒருவேளை உங்கள் சொந்த அனுபவத்திலிருந்து இதற்குப் பொருத்தமான சம்பவத்தை சொல்லலாம். யாக்கோபு தனது மாமா லாபானுடன் தங்கப்போகிறான் என்பதை பிள்ளைகளிடம் நினைவில் வைக்கச் சொல்லுங்கள்.<br>• கதையில் புதிய கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்துங்கள்; லாபானும் அவருடைய மகள்கள் லேயாளும் ராகேலும்.<br>• இந்த கதையில் தான் ஏமாற்றப்படுவதைப் போல் யாக்கோபு உணருகிறான். |
| **கற்றுக்கொடுங்கள்** | • யாக்கோபு ஆரானுக்குச் சென்றுகொண்டிருந்தான். பயணத்தின் முடிவில் ஒரு கிணற்றினருகே சில மேய்ப்பர்களை அவன் சந்தித்தான். அவனுடைய மாமா லாபானை அவர்களுக்குத் தெரியும். (ஆதியாகமம் 29: 1-8)<br>• லாபானின் மகள் ராகேல், ஆடுகளுடன் கிணற்றினருகே வந்தாள். யாக்கோபு கிணற்றின்மீது மூடியிருந்த கல்லை உருட்டி நீக்கி, கிணற்றிலிருந்து ஆடுகளுக்குத் தண்ணீர்க் காட்ட அவளுக்கு உதவினான். (ஆதியாகமம் 29: 9-10)<br>• யாக்கோபு தான் யாரென்பதை ராகேலிடம் சொன்னான். அவள் தனது தந்தைக்குத் தெரிவிக்க வீட்டுக்கு ஓடினாள், லாபான் தன்னுடன் தங்கவேண்டுமென யாக்கோபை அழைத்தார். (ஆதியாகமம் 29: 11-14) அவர்களுக்கு இடையில் நடந்திருக்கும் உரையாடலில் சிலவற்றை கற்பனை செய்துபாருங்கள்!<br>• யாக்கோபு லாபனுக்காக வேலை செய்யத் தொடங்கினான். ராகேலை மனைவியாகப் பெறுவதற்காக யாக்கோபு லாபானுக்கு ஏழு ஆண்டுகள் வேலை செய்தான். அவன் ராகேலை நேசித்ததால், இதைச் செய்ய தயாராக இருந்தான். (ஆதியாகமம் 29: 15-20)<br>• ஆனால் லாபான் யாக்கோபை ஏமாற்றினார். ராகேலை அவனுக்குக் கொடுப்பதற்கு பதிலாக லேயாளை மனைவியாக கொடுத்தார். (ஆதியாகமம் 29: 21-27) அவன் ஏமாற்றப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தபோது யாக்கோபுக்கு எப்படி இருந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்? யாக்கோபு மற்றவர்களை ஏமாற்றிய வழிகளை நினைவுகூரும்படி பிள்ளைகளிடம் சொல்லுங்கள்.<br>• யாக்கோபு ராகேலையும் திருமணம் செய்துகொண்டான், ஆனால் அவன் மேலும் ஏழு வருடம் வேலை செய்யவேண்டியிருந்தது. (ஆதியாகமம் 29: 29-30) லாபான் யாக்கோபின் உழைப்பை யெல்லாம் சுரண்டியது போல் தோன்றியது!<br>• தான் மற்றவர்களை ஏமாற்றும் சமயங்களில் யாக்கோபு வருத்தப்பட்டிருப்பான் என நினைக்கிறீர்களா?<br>• யாக்கோபுக்கு இப்படி நடந்தது சரிதான், அவன் அதற்குப் பாத்திரன் என்று சிலர் சொல்லலாம். அதைப் பற்றி பிள்ளைகள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கேட்டு விவாதிக்கவும்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: bibleforchildren.org - Jacob. FBI - யாக்கோபு திருமணத்தில் ஏமாற்றப்படுகிறான் |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய ஆதியாகமம் 29: 28 அல்லது கலாத்தியர் 6: 7ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • லாபான் எங்கு வாழ்ந்தார்?<br>• லாபனின் இரண்டு மகள்களின் பெயர் என்ன?<br>• ஆரானில் சேர்ந்தபோது யாக்கோபு ராகேலுக்கு எப்படி உதவினான்?<br>• யாக்கோபு எந்த மகளை நேசித்தான்?<br>• ராகேலை திருமணம் செய்துகொள்வதற்காக எவ்வளவு காலம் வேலைசெய்வேன் என்று யாக்கோபு சொன்னான்?<br>• லாபான் யாக்கோபை எவ்வாறு ஏமாற்றினார்? |

## A10 கதை 1

**ஸ்தேவான் கர்த்தராகிய இயேசுக்காக மரிக்கிறார் - இந்தக் கதை கர்த்தராகிய இயேசுவின்மீதுள்ள ஸ்தேவானின் பேரன்பைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• ஸ்தேவான் தேவனை நேசித்தார், தன்னுடைய எதிரிகளையும் நேசித்தார்.<br>• ஸ்தேவான் கல்லெறியப்பட்டிருக்கையில், இயேசு அவருக்காக பரலோகத்தில் காத்துக்கொண்டிருந்தார்.<br>**முக்கிய வசனம்: 1 யோவான் 4: 19**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 6: 8-15, 7: 54-60** |
| அறிமுகப்படுத்துங்கள் | • பிள்ளைகள் மற்றவர்களுக்கு உதவியிருக்கும் நேரங்களைக் கேளுங்கள்.<br>• நீங்கள் யாருக்காவது உதவி செய்ய முன்வரும்போது, உங்கள் உதவி தேவையில்லை என்று அவர்கள் உங்களிடம் சொன்னால் எப்படி உணருவீர்கள்? அவர்கள் உங்களை தூஷித்தால் அல்லது உங்கள் மனதைப் புண்படுத்த முயற்சித்தால் என்ன செய்வீர்கள்?<br>• பைபிளின் இன்றையக் கதை மற்றவர்களுக்கு உதவிய ஒரு மனிதரைப் பற்றியது. மற்றவர்கள் அவரை எப்படி நடத்தினார்கள் என்று காண்போம். |
| கற்றுக்கொடுங்கள் | • ஸ்தேவான் கர்த்தராகிய இயேசுவை நேசித்தார். அவர் மக்களுக்கு உதவும் அற்புதங்களைச் செய்தார், ஆனால் சில யூதர்களுக்கு அவரையும் இயேசுவையும் பிடிக்கவில்லை. அவர் இயேசுவைப் பற்றி மக்களிடம் சொல்வதைத் தடுக்கவும் அவருக்குத் தீங்குசெய்யவும் அவர்கள் இரகசியமாகத் தீர்மானித்தார்கள். (அப்போஸ்தலர் 6: 8-11)<br>• இந்த ஆட்கள் ஸ்தேவானைப் பற்றிப் பொய்சொல்லி மக்களை அவருக்கு எதிராகத் திருப்பினார்கள், அவரை என்ன செய்யவேண்டும் என்பதை முடிவுசெய்ய ஒரு நீதிமன்றத்திற்கு அவரை கொண்டுபோனார்கள். ஸ்தேவான் சொன்னதைப் பற்றி பொய் சாட்சிக்கூறவும் அவர்கள் ஆட்களை ஏற்படுத்தினார்கள். (அப்போஸ்தலர் 6: 12-15) நீங்கள் ஸ்தேவனாயிருந்தால் எப்படி உணர்ந்திருப்பீர்கள்?<br>• ஸ்தேவானைப் பற்றியும் இயேசுவைப் பற்றியும் பொய்கள் கூறப்பட்டாலும், ஸ்தேவான் கோபப்படவில்லை. இயேசு அவருடன் இருந்தார் என்பதை மக்கள் பார்க்க முடிந்தது - உண்மையில் அவரது முகம் ஒரு தேவதூதனுடைய முகம்போலக் காணப்பட்டது. (அப்போஸ்தலர் 6: 15) ஸ்தேவான் இயேசுவை ஆதரித்துப் பேசினார், ஆனால் அது மக்களுக்கு ஆத்திரமூட்டியது. (அப்போஸ்தலர் 7: 54) பயப்படுவதற்குப் பதிலாக, ஸ்தேவான் பரலோகத்தை நோக்கிப் பார்த்தார், அங்கு இயேசு அவருக்காகக் காத்திருந்தார். (அப்போஸ்தலர் 7: 55-56) இயேசுவைக் கண்டபோது ஸ்தேவான் எப்படி உணர்ந்திருப்பார்?<br>• மக்கள் அந்நேரம் மூர்க்கமடைந்து, ஸ்தேவான் சொல்வதை அதற்குமேல் கேட்க மறுத்துவிட்டனர். அவர்கள் ஸ்தேவானை நகரத்திற்கு வெளியேக் கூட்டிக்கொண்டுபோய், அவரைக் கொலைசெய்யப் பெரிய கற்களை அவர்மீது எறிந்தார்கள். அவர்கள் இதைச் செய்தபோது, இயேசு தம்முடைய ஆவியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், மக்கள் தனக்குச் செய்வதை அவர்களுக்கு மன்னிக்க வேண்டும் என்றும் ஸ்தேவான் ஜெபித்தார். பின்னர் அவர் மரித்தார். (அப்போஸ்தலர் 7: 57-60)<br>• ஸ்தேவான் மரிப்பதற்கு முன்பு தனது எதிரிகளுக்கு ஏதோ ஒன்றைச் செய்யும்படி இயேசுவிடம் கேட்டார் - இதை அவர் ஏன் செய்தார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?<br>• நாம் செய்யும் கெட்ட செயல்களுக்கு நாம் எப்படி மன்னிப்புப் பெறலாம்?<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI - ஸ்தேவன் இரத்தசாட்சியாய் மரிக்கிறார். |
| கற்றுக்கொள்ளுங்கள் | முக்கிய வசனமாகிய 1 யோவான் 4. 19ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். ஸ்தேவான் இயேசுவின்மீது கொண்டிருந்த அன்பை, தான் அவருக்காக மரித்த விதத்தில் வெளிப்படுத்தினார்.<br>ஏற்கெனவே கர்த்தராகிய இயேசு சிலுவையில் மரித்ததன் மூலம் ஸ்தேவன்மீதுள்ள தமது அன்பைக் காட்டியிருந்தார். |
| நினைவுகூருங்கள் | • ஸ்தேவான் சபையில் ஒரு உதவியாளராக இருந்தார். அவர் எப்படி உதவினார்?<br>• ஸ்தேவானை எல்லோருக்கும் பிடித்திருந்ததா? இல்லையென்றால் ஏன்?<br>• ஸ்தேவானுக்கு எதிராக யூதர்கள் எப்படி மக்களைத் திருப்பினார்கள்?<br>• தன்னைப் பற்றியும் இயேசுவைப் பற்றியும் பொய் சொல்லியபோது ஸ்தேவான் எவ்வாறு செயல்பட்டார்?<br>• ஸ்தேவான் வானத்தைப் பார்த்தபோது என்ன கண்டார்?<br>• ஸ்தேவானை அந்த மனிதர்கள் என்ன செய்தார்கள்?<br>• ஸ்தேவான் என்ன ஜெபித்தார்?<br>• நாம் எவ்வாறு மன்னிக்கப்பட முடியும்? |

## A10 கதை 2

**பிலிப்பு நற்செய்தியைப் பகிர்ந்துகொள்கிறார் - இந்தக் கதை ஒரு ஆப்பிரிக்கர் கர்த்தராகிய இயேசுவை விசுவாசிப்பதைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• நமது பாவங்கள் மன்னிக்கப்பட நாம் கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்க வேண்டியது அவசியம்.<br>• அவருடைய வார்த்தையாகிய பைபிளின் கடினமான பாகங்களை புரிந்துகொள்ள தேவன் நமக்கு உதவிசெய்கிறார்.<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 8: 35**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 8: 26-40** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • ஒரு பாலைவனம் எப்படியிருக்கும் என்பதைப் பிள்ளைகளிடம் கேளுங்கள். அது பார்க்க எதைப்போல் இருக்கிறது? அங்கிருந்தால் எப்படி இருக்கும்? ஒரு அறிமுகமுமில்லாத நபரிடம் பேசுவதற்காக ஒரு பாலைவனத்திற்குச் செல்லும்படி உங்களைக் கேட்டுக்கொண்டால் நீங்கள் போவீர்களா?<br>• உங்களுக்கு ஏதோ ஒன்றைப் புரிந்துகொள்வது கடினமாகத் தோன்றினபோது - எ.கா. ஒரு புத்தகம்- கணக்குப் பிரச்சனை- யார் உங்களுக்கு உதவியது? |
| **கற்றுக்கொடுங்கள்** | • பிலிப்பு இயேசுவை விசுவாசித்து, பட்டணங்களிலும் நகரங்களிலும் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைப் பிரசங்கித்தார். ஒரு நாள் ஒரு தேவதூதன், பாலைவனம் வழியாகச் செல்லும் ஒரு பாதையில் செல்லும்படி அவரிடம் கூறினார். (பிலிப்பு அதைப் பற்றி என்ன சிந்தித்திருக்கக் கூடும்?) தன்னை நோக்கி ஒரு இரதம் வருவதைக் கண்டார் என்பதை விளக்குங்கள். அவர் எத்தியோப்பியாவிலிருந்து வந்து வீட்டுக்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்த முக்கியமான மனிதர் என்று தோன்றியது. (இது எங்கேயிருக்கிறது என்று விளக்கவும்) (அப்போஸ்தலர் 8: 26-28) அந்த எத்தியோப்பிய மனிதர் எதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?<br>• பரிசுத்த ஆவியானவர் அம்மனிதரை நோக்கி செல்லுமாறு பிலிப்புவிடம் சொன்னார். பழைய ஏற்பாட்டிலிருக்கும் ஏசாயா நூலிலிருந்து அவர் உரக்க வாசித்துக் கொண்டிருந்தார். அவர் அதைப் புரிந்துகொண்டாரா என்று பிலிப்பு கேட்டார். ஆனால், அந்த மனிதர் குழம்பினார். (அப்போஸ்தலர் 8: 29-31). அந்த வசனங்களில் ஒன்று, ஆட்டுக்குட்டியைப் போன்று கொல்லப்படும் ஒருவரைப் பற்றியது. (ஒரு ஆட்டுக்குட்டி கொல்லப்பட கொண்டுபோகும்போது கொந்தளிக்காமல் செல்லும் என்பதை விளக்குங்கள்.) நம்முடைய பாவங்களுக்காக சிலுவையின்மீது இயேசு மரிப்பதைப் பற்றியே அந்த வசனங்கள் கூறுகின்றன என்று பிலிப்பு விளக்கினார். (இயேசு மரிக்க சித்தமுள்ளவராய் இருந்தார் என்பதை விளக்கவும்)<br>• அந்த எத்தியோப்பிய மனிதர், தான் பாவஞ்செய்திருப்பதை அறிந்து, தேவனால் மன்னிக்கப்பட வேண்டியது அவசியம் என்று உணர்ந்தார். தாமதிக்காமல், கிறிஸ்து அவருக்காக மரித்தார் என்று நம்பினார். (அப்போஸ்தலர் 8: 32-35)<br>• அவர் இயேசுவைப் பின்பற்றுபவர் என்பதைக் காட்ட பிலிப்பு அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் (ஞானஸ்நானத்தைப் பற்றி விளக்குங்கள்). அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தையும் மகிழ்ச்சியையும் எடுத்துச் சொல்லுங்கள்.<br>• பரிசுத்த ஆவியானவர் இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்கு சொல்லுவதற்கு பிலிப்புவை எடுத்துக்கொண்டு போய்விட்டார். (அப்போஸ்தலர் 8: 36-40)<br>• இயேசு தங்களது பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் என்பதை அனைவரும் அறிய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். பைபிள் எதைப் பற்றிப் பேசுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள உதவிசெய்யும் மக்களைப் பற்றி பேசுங்கள். இயேசுவைப் பற்றிய நற்செய்தியை நாம் கேள்விப்பட்டிருக்கிறபடியால் நாம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI - பிலிப்பும் எத்தியோப்பிய அதிகாரியும். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய அப்போஸ்தலர் 8: 35ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • எங்கே போகும்படி தேவதூதன் பிலிப்புவிடம் கூறினான்?<br>• அந்த மனிதன் எந்த நாட்டை சேர்ந்தவர்?<br>• பிலிப்பு ஏன் அவரிடம் சென்றார்?<br>• அவர் எதைப்பற்றி வாசித்துக்கொண்டிருந்தார்?<br>• பிலிப்பு இயேசுவைப் பற்றி அவரிடம் விளக்கினபோது அந்த மனிதன் என்ன செய்தார்?<br>• அவர் எங்கே ஞானஸ்நானம் பெற்றார்?<br>• அவர் வீட்டிற்குத் திரும்பிச் சென்றபோது என்ன உணர்ந்தார்?<br>• எப்படி நம் பாவங்கள் மன்னிக்கப்பட முடியும்? |

# A10 கதை 3

**சவுலும் பிரகாசமான ஒளியும்! – இந்தக் கதை வாழ்க்கைகளை மாற்றும் தேவனுடைய வல்லமையைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• இயேசு எல்லோரையும் நேசிக்கிறார், எல்லோருக்காகவும் மரித்தார், அவரை வெறுக்கிற மக்களுக்காகவும்கூட மரித்தார்.<br>• கர்த்தராகிய இயேசுவுக்கு மட்டுமே நம்முடைய வாழ்க்கையை மாற்றும் வல்லமை இருக்கிறது.<br>**முக்கிய வசனம்:** 2 கொரிந்தியர் 5: 17<br>**வேதப்பகுதி:** **அப்போஸ்தலர்** 9: 1-9 |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • சவுல் இயேசுவை வெறுத்த ஒரு யூதர். இயேசுவைப் பின்பற்றினவர்கள் அனைவரையும் கொலை செய்யும் அளவுக்கு அவர்களை வெறுத்தார். ஸ்தேவான் கல்லெறியப்பட்டபோது அவர் அங்கே எப்படி இருந்தார் என்பதை விளக்குங்கள். (கதை 1)<br>• சவுல் உங்கள் நண்பனாக இருக்க விரும்பியிருப்பீர்களா என பிள்ளைகளிடம் கேளுங்கள். ஏன்? ஏன் முடியாது? |
| **கற்றுக்கொடுங்கள்** | • ஒருநாள் சவுல் தமஸ்கு என்ற நகரத்திற்குக் கிறிஸ்தவர்களைக் கண்டுபிடித்து அவர்களை சிறையிலடைப்பதற்காகச் சென்றார். (அப்போஸ்தலர் 9: 1-2) போகும் வழியில் சவுலுக்கிருந்த உணர்வுகள் மற்றும் மனப்பான்மையைப் பற்றி கலந்து பேசுங்கள்.<br>• அவர் தமஸ்குவிற்கு வந்தபோது, திடீரென்று தன்னைச் சுற்றிலும் ஒரு பிரகாசமான ஒளியைக் கண்டார்; அவர் தரையிலே விழுந்தார். சவுலுக்கு சொல்லப்பட்ட வார்த்தைகளையும் அதற்கு அவர் பதில் சொன்ன வார்த்தைகளையும் பயன்படுத்துங்கள். சவுல் இப்பொழுது எப்படி உணர்கிறார் என்பதை விளக்குங்கள். (அப்போஸ்தலர் 9: 3-4)<br>• நான் இயேசு என்று அந்தக் குரல் பதிலளித்தது. சவுல் இப்போது உணர்ந்ததை விளக்குங்கள் – இயேசு தேவனுடைய குமாரன், அவர் உயிருடன் இருக்கிறார், இயேசுவைப் பற்றி இதற்குமுன் தான் கொண்டிருந்த எண்ணங்கள் அனைத்தும் தவறானவை! தமஸ்கு நகரத்திற்குச் செல்லவேண்டும் என்றும், என்ன செய்யவேண்டும் என்பது அங்கு சொல்லப்படும் என்றும் இயேசு அவரிடம் சொன்னார். சவுலோடு இருந்த ஆட்கள் அந்தக் குரலைக் கேட்டபோது ஆச்சரியமடைந்தார்கள், ஆனால் அவர்கள் யாரையும் பார்க்கவில்லை. (அப்போஸ்தலர் 9: 5-7)<br>• சவுல் எழுந்தபோது அவர் குருடனாயிருந்தார்; அவரைத் தாங்கிப்பிடித்து நகரத்திற்கு கொண்டுபோக வேண்டியிருந்தது. மூன்று நாட்களுக்கு அவர் பார்வையற்றவராக இருந்தார், எதையும் சாப்பிடவோ அல்லது குடிக்கவோ இல்லை. (அப்போஸ்தலர் 9: 8-9) அவர் பார்வையிழந்தவராக இருந்தபோது எப்படி உணர்ந்திருப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?<br>• கர்த்தராகிய இயேசு ஏன் இந்த விதத்தில் சவுலை சந்தித்தார் என்பதை விவாதிக்கவும். இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் சவுல் வெறுத்தார் என்பதைப் பிள்ளைகளுக்கு நினைப்பூட்டுங்கள். சவுல் எல்லாரையும் கொலைசெய்ய விரும்பினார், ஆனால் இயேசு அவரை நேசித்தார், அவர் தகுதியற்றவராக இருந்தபோதிலும் அவர் தமது சீஷடராயிருக்கும்படி விரும்பினார். கர்த்தராகிய இயேசு அவருடைய வாழ்க்கையை முற்றிலும் மாற்ற விரும்பினார்.<br>• நம்முடைய பாவத்தைப் போக்கவும், நாம் புதிய வாழ்க்கையை வாழ நமக்கு ஆற்றலைத் தரவும் கர்த்தராகிய இயேசு நமக்கு வேண்டும்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – சவுலின் மனந்திரும்புதல். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய 2 கொரிந்தியர் 5: 17ஐ சவுலுடைய வாழ்க்கையோடு சம்பந்தப்படுத்தி<br>தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். மேலும் நாம் “கிறிஸ்துவுக்குள்” இருக்கும்போது பழைய வாழ்க்கை மாற்றப்பட்டு, இப்போது புது வாழ்வு பெற்றிருக்கிறோம் என்ற உண்மையையும் எடுத்துச்சொல்லுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • சவுல் எங்கு சென்றுகொண்டிருந்தார்?<br>• அவர் ஏன் இந்தப் பயணத்தை மேற்கொண்டார்?<br>• அவர் என்ன கண்டார்?<br>• அவர் என்ன கேட்டார்?<br>• அந்தக் குரல் என்ன சொன்னது?<br>• தன்னிடம் பேசிவது இயேசு என அறிந்தபோது சவுல் உணர்ந்துகொண்டது என்ன?<br>• மூன்று நாட்களுக்கு சவுல் என்ன எடுக்காமல் இருந்தார்?<br>• ஒரு புதிய வாழ்க்கையை வாழ நமக்கு ஆற்றலைத் தரக்கூடிய ஒரே நபர் யார்? |

## **A10** கதை 4

**சவுல் ஒரு மனமாற்றமடைந்த மனிதனாக மாறுகிறார் – மற்றவர்களிடம் சொல்வதற்கு சவுலை தேவன் எவ்வாறு பயன்படுத்தினார் என்பதுதான் இந்தக் கதை.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• தேவன் நமக்கு உதவிசெய்ய விரும்புகிறார், நமக்குத் தேவைப்படும்போது மக்களை நம்மிடத்தில் அனுப்புகிறார்.<br>• சவுலைப் போலவே, இன்றும் மக்களுடைய வாழ்க்கையை தேவன் மாற்றுகிறார், அவர்களைத் தமக்குப் பயனுள்ளவர்களாக ஆக்குகிறார்.<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 9: 20**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 9: 10-23** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • சவுலின் கதையின் முதல் பாகத்தை மறுபடியும் திருப்பிப் பாருங்கள். – ”பழைய” சவுல் யாரென்று உனக்கு நினைவிருக்கிறதா? ”பழைய” சவுலைப் பற்றி தமஸ்குவில் வசித்த இயேசுவின் சீடர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள்? (பயந்துபோய் ...)<br>• தேவன் மக்களை ஆயத்தப்படுத்த வேண்டியிருந்தது. ஏனெனில் அப்பொழுதுதான் தேவனுடைய குடும்பத்தில் ஒருவராக இருக்கும்படி புதிய சவுலை ஏற்றுக்கொள்ள அவர்கள் விரும்புவார்கள். என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்வோம் .... |
| **கற்றுக்கொடுங்கள்** | • தேவன் ஒரு கனவில் அனனியாவைக் கூப்பிட்டு, சவுலைக் கண்டுபிடித்துப் பார்த்துவரச் சொன்னார். (அப்போஸ்தலர் 9: 10-12) அனனியா செல்ல விரும்பினார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஏன் இல்லை?<br>• சவுல் தன்னைக் கைதுசெய்யவோ அல்லது கொலைசெய்யவோக் கூடும் என்று அனனியா பயந்தார். தேவனைப் பற்றி முன்னொருபோதும் கேள்விப்பட்டிராத மக்களிடம் அவரைக் குறித்து சொல்லும் ஒரு சிறந்த பணிக்காக சவுலைத் தாம் தேர்ந்தெடுத்திருப்பதினால் போகக் கவலைப்பட வேண்டாம் என்று தேவன் அனனியாவிடம் சொன்னார். (அப்போஸ்தலர் 9: 13-16)<br>• அனனியாக் கீழ்ப்படிந்து சவுலிடம் சென்றார். அவர் சகோதரனே என்று அழைத்தார் (அவர்கள் ஏன் சகோதரர்களாக இருந்தார்களென்று விவரிக்கவும்), மேலும் தன்னைக் கர்த்தராகிய இயேசுவை அனுப்பியதாகவும் கூறினார். அவர் சவுலின் கண்களின்மீது கைகளை வைத்தபோது, சவுலால் மீண்டும் பார்க்க முடிந்தது. சவுலும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார். அவர் ஞானஸ்நானம் பெற்றார், சாப்பிட சில உணவு வகைகள் இருந்தன.(அப்போஸ்தலர் 9: 17-19ஆ) அனனியா தன்னைப் பார்க்கவந்தபோது சவுல் எப்படி உணர்ந்திருப்பார்?<br>• விரைவில் சவுல் தமஸ்குவிலிருந்த இயேசுவின் மற்ற சீடர்களைச் சந்தித்தார். உடனடியாக அவர் கர்த்தராகிய இயேசுவைப் பற்றிப் பிரசங்கிக்கத் தொடங்கினார். தமஸ்குவில் சவுலைச் சந்தித்தவர்கள் பதிலுக்கு எப்படிச் செயல்பட்டிருப்பார்கள் என்பதை விளக்குங்கள். அவர் இப்படி இருப்பார் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்!<br>• சவுலின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றி கேள்விப்பட்ட யூதர்களுக்கு அவர் பிரசங்கித்த செய்திப் பிடிக்கவில்லை, எனவே அவர்கள் அவரைக் கொலைசெய்யத் திட்டமிட்டனர். இரவில் ஒரு கூடையில் வைத்து சுவர்களிலிருந்து கீழே இறக்கிவிடப்பட்டதன் மூலம் சவுல் தமஸ்குவிலிருந்து தப்பிக்க வேண்டியிருந்தது. (அப்போஸ்தலர் 9: 19-25) சவுலின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தையும் இப்பொழுது அவர் இயேசுவில் விசுவாசிப்பவராக இருப்பதால் காணப்படும் சூழ்நிலைகளையும் வேறுபடுத்திப் பாருங்கள்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – சவுலின் மனந்திரும்புதல். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய அப்போஸ்தலர் 9: 20ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • அனனியாவோடு தேவன் எப்படிப் பேசினார்?<br>• அனனியா சவுலிடம் செல்ல ஏன் பயந்தார்?<br>• சவுலின் புதிய வேலை என்னவாயிருந்தது?<br>• அனனியா அவருடைய கைகளை வைத்தபோது சவுலின் கண்களுக்கு என்ன ஆயிற்று?<br>• அனனியா அவரை சந்தித்தபோது சவுலுக்கு வேறு என்ன தானம் கிடைத்தது?<br>• சவுல் உடனடியாக என்ன செய்ய ஆரம்பித்தார்?<br>• சவுல் ஏன் ஒரு கூடையிலே தப்பிக்க வேண்டியதாயிற்று?<br>• சவுலுடைய வாழ்க்கை மாறியதுபோல நம் வாழ்க்கை எப்படி முழுமையாக மாற முடியும்? |

# A11 கதை 1

**அந்தியோகியாவில் பவுல் (சவுல்) – இந்தக் கதை தேவனுடைய வேலையில் உதவிசெய்வதைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• இயேசுவை விசுவாசிப்பவர்கள் “கிறிஸ்தவர்கள்” என்று அழைக்கப்படுகிறார்கள்.<br>• நாம் அவரை விசுவாசிக்கும்போது தேவன் நமக்கு ஒரு சிறப்புத் திட்டத்தை வைத்திருக்கிறார் – நாம் அவருக்கு உதவியாளர்களாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 11: 26**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 11: 19-26** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • வெவ்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு உதவ முடியும் என்பதை பிள்ளைகளிடம் கேளுங்கள் – உனது ஆசிரியருக்கு நீ எப்படி உதவ முடியும்? உனது அம்மா உடம்பு சரியில்லாமல் இருந்தால் வீட்டில் என்ன செய்வாய்?<br>• இன்றைய கதையில், தேவனுடைய வேலையில் இரண்டுபேர் ஒன்றுசேர்ந்து உதவுவதைப் பற்றி விளக்குங்கள்... |
| **கற்றுக்கொடுங்கள்** | • இயேசுவைப் பற்றிய நற்செய்தி பரவியது, தேவனுடைய சபை வளர்ந்துகொண்டிருந்தது. சில விசுவாசிகள் அந்தியோகியா என்ற நகரத்தில் வசிக்கப் போயிருந்தார்கள்.அங்கு, முன்னர் நற்செய்தியைக் கேள்விப்பட்டிராதவர்களுக்கு அவர்கள் அதை நன்றாகச் சொல்ல முடிந்தது, அநேகர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். (அப்போஸ்தலர் 11: 19-21)<br>• சீக்கிரத்தில் அந்தியோகியாவில் நடந்துகொண்டிருந்த பெரிய காரியங்களை எருசலேமிலுள்ள சபைக் கேள்விப்பட்டது. விசுவாசிகள் எப்படி உணருவார்கள்? (உற்சாகமாக) இன்னும் அதிகமாய் அறிவதற்காக அவர்கள் பர்னபா என்ற ஒருவரை அனுப்பத் தீர்மானித்தார்கள். அவர் அந்தியோகியாவுக்குச் சென்றார், அங்கே அநேக புதிய விசுவாசிகள் இருந்ததைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். பர்னபா புதிய விசுவாசிகளுக்குக் கற்றுத்தருவதற்கும், கர்த்தராகிய இயேசுவை நேசிப்பதை ஊக்கவிக்குவிப்பதற்கும் அவரால் முடிந்த அனைத்தையும் செய்தார். (அப்போஸ்தலர் 11: 22-24) பர்னபா எனப்பட்ட மனிதர்?<br>• பர்னபா அந்தியோக்கியாவில் மிகவும் ஓய்வின்றி சுறுசுறுப்பாக இருந்ததால் அவருக்கு ஒரு உதவியாளர் தேவைப்பட்டார். சில வருடங்களுக்கு முன்பு, தான் சந்தித்திருந்த சவுலை தேவன் இவருக்கு நினைப்பூட்டினார். சவுல் கர்த்தராகிய இயேசுவைச் சந்தித்தப் பிறகு, அவருடைய சொந்த ஊரான தர்ஷீஸிக்குத் திரும்பிச் சென்றார். தனக்கு ஊழியத்தில் உதவியாய் இருப்பதற்காக பர்னபா தர்ஷீஸுக்குப் போய் சவுலை மீண்டும் அந்தியோகியாவுக்கு அழைத்துக்கொண்டு வந்தார். (அப்போஸ்தலர் 11: 25-26)<br>• முதன்முதலில் அந்தியோகியாவில் ஒரு மிஷனரியாக தன்னுடைய வேலையை ஆரம்பித்ததால், சவுல்/பவுலுக்கு அந்த இடம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்குங்கள். அது தேவன் அவருக்குத் திட்டமிட்டிருந்த ஒரு விசேஷ வேலையாகும். சவுலும் பர்னபாவும் அடுத்த வருடத்தை அந்தியோகியாவிலுள்ள விசுவாசிகளுக்கு போதிப்பதில் செலவிட்டனர். அந்த சமயத்தில்தான், இயேசுகிறிஸ்துவில் விசுவாசித்தவர்கள் முதன்முதலாகக் “கிறிஸ்தவர்கள்” என்று அழைக்கப்பட்டார்கள். (அப்போஸ்தலர் 11: 26)<br>• இயேசுவில் நம்பிக்கை வைக்கும்பொழுது நாமும் “கிறிஸ்தவர்களாக” ஆகிறோம். நாம் அவருடைய பெயரைப் பகிர்ந்துகொள்கிறோம்! பவுலுக்கு வைத்திருந்ததைப் போலவே, எல்லா கிறிஸ்தவர்களுக்கும் தேவன் ஒரு சிறப்புத் திட்டத்தை வைத்திருக்கிறார். கிறிஸ்தவர்கள் அவருடைய உதவியாளர்களாக இருக்கவேண்டுமென அவர் விரும்புகிறார்.<br>• கிறிஸ்தவர்கள் ஆவதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?<br>• நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால், தேவன் நம்மை அவருடைய உதவியாளர்களாக எந்த விதத்தில் பயன்படுத்த முடியும்?<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய அப்போஸ்தலர் 11: 26ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • எந்தப் பட்டணத்தில் சபை வளர்ந்து கொண்டிருந்தது?<br>• எருசலேமிலுள்ள மக்கள் அந்தியோகியாவுக்கு யாரை அனுப்பினர்?<br>• அந்தியோக்கியாவில் பர்னபா என்ன செய்தார்?<br>• பர்னபாவுக்கு விரைவில் என்னத் தேவைப்பட்டது?<br>• பர்னபா யாரைத் தேடினார்?<br>• சவுலும் பர்னபாவும் அந்தியோக்கியாவில் எவ்வளவு காலம் செலவழித்தனர்?<br>• இயேசுவை விசுவாசித்த மக்களுக்கு என்னப் பெயர் கொடுக்கப்பட்டது?<br>• சவுல் யாருடைய வேலையை செய்தார்? |

## A11 கதை 2

**சைப்ரஸில் பவுல் (சவுல்) – இந்தக் கதை கர்த்தராகிய இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்லுவதைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• இயேசுவை விசுவாசிப்பதின் மூலம் நாம் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.<br>• நாம் இயேசுவைப் பற்றி மற்றவர்களிடம் சொல்ல வேண்டும்.<br>**முக்கிய வசனம்: மத்தேயு 28: 19**<br>**வேதப்பகுதி:** அப்போஸ்தலர் 13: 1–12 |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • பிள்ளைகளை இருவர் இருவராக செயல்பட வையுங்கள். அவர்கள் இயேசுவைப் பற்றி எத்தனை விஷயங்களை யோசிக்க முடியுமோ யோசித்துப் பார்க்கட்டும்.<br>• இன்றைய கதை பவுலைப் பற்றியது (பெயர் மாறியதைக் குறிப்பிடுங்கள்) என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்குங்கள். பர்னபாவும் யோவான் மாற்கும் இயேசுவைப் பற்றி மக்களிடம் பேசுகிறார்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | • ஒருநாள் அந்தியோகியாவிலிருந்த கிறிஸ்தவர்கள் ஒன்றாகக் கூட்டப்பட்டார்கள். பவுலும் பர்னபாவும் அங்கே இருந்தார்கள். பர்னபாவும் பவுலும் தேவனுக்காக ஒரு சிறப்பு வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறார்கள் என்பதை அங்கிருந்த மற்ற தலைவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் தெளிவுபடுத்தினார். அதைப் பற்றி ஜெபித்த பிறகு, பர்னபாஸ், சவுல், யோவான் மார்க் (பர்னபாவின் சகோதரனின் மகன்) ஆகியோரை சைப்ரஸ் என்று அழைக்கப்படும் தீவுக்கு ஒரு படகில் ஏற்றி அனுப்பிவைத்தனர். (அப்போஸ்தலர் 13: 1–4)<br>• அவர்கள் அங்கு சென்றுசேர்ந்தபோது, சுற்றிலும் பயணம் செய்து நற்செய்தியைப் பிரசங்கித்தார்கள். பாப்போ என்ற பட்டணத்தில் சைப்ரஸின் கவர்னருக்காக பணியாற்றிய ஒரு மந்திரவாதியைச் சந்தித்தனர். பர்னபாவையும் சவுலையும் குறித்து ஆளுநர் கேள்விப்பட்டு அவர்களைச் சந்திக்க விரும்பினார். அவர் கடவுளின் வார்த்தையைக் கேட்டார். ஆனால் எலிமாஸ் என்னும் மாயவித்தைக்காரன் அவர் விசுவாசிப்பதை தடுக்க முயன்றான். (அப்போஸ்தலர் 13: 5–8)<br>• எலிமாஸ் சாத்தானுடைய வேலையைச் செய்கிறான் என்பதை சவுல் அறிந்தார். சவுல் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரப்பப்பட்டார். அவர் மந்திரவாதியை நேராகப் பார்த்து, அவன் தீமை செய்கிறபடியால் தேவன் அவனைக் குருடனாக ஆக்குவார் என்றார். பவுல் பேசிய உடனேயே எலிமாஸ் குருடனாகி, தன்னை வழிநடத்த யாராவது ஒருவரைக் கண்டுபிடிக்கத் தடவித் தடுமாறினான். (அப்போஸ்தலர் 13: 9–11) கர்த்தராகிய இயேசுவை எதிர்த்து நிற்பது தவறு என்று விளக்குங்கள்.<br>• ஆளுநர் தேவனுடைய வல்லமையின் மகத்துவத்தைக் கண்டார்; அவர் இயேசுவை விசுவாசித்தார். (அப்போஸ்தலர் 13: 12)<br>• பவுல், பர்னபாஸ், யோவான் மார்க் மற்றும் ஆளுநர் ஆகியோர் இயேசுவை விசுவாசிப்பதன் மூலம் சரியான தீர்மானத்தை எடுத்தனர். எலிமாஸ் தவறானதை தெரிவுசெய்தான். நாமும்கூட இயேசுவில் விசுவாசம் வைக்கவேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.<br>• உண்மையில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரே செய்தி, இயேசுவின் செய்தியே. ஏன்?<br>• இயேசுவைப் பற்றி வேறொரு இடத்தில் மக்களுக்குச் சொல்பவரை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?<br>• இயேசுவைப் பற்றி மற்றவர்களிடம் சொல்வீர்களா?<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – பவுலும் பர்னபாவும் சீப்புருத்தீவுக்குச் செல்லுதல். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய மத்தேயு 28: 19ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். இவைகள் இயேசு பரலோகத்திற்குத் திரும்பிப்போவதற்கு முன்பு சொன்ன வார்த்தைகள். எல்லா இடங்களிலும் (எல்லா நாடுகளிலும்) உள்ள மக்கள் நற்செய்தியைக் கேட்டு, அவரில் விசுவாசம் வைக்கவேண்டும் என்பதே அவரது திட்டம். |
| **நினைவுகூருங்கள்** | • விசேஷமான வேலையைச் செய்ய பவுலையும் பர்னபாவையும் அனுப்பியது யார்?<br>• அவர்களுடன் சென்றது யார்?<br>• அவர்கள் எவ்வாறு பயணம் செய்தனர்?<br>• அவர்கள் சென்ற தீவின் பெயர் என்ன?<br>• பாப்போஸில் யார் யாரை சந்தித்தார்?<br>• பாப்போஸில் எந்த நபர் இயேசுவை விசுவாசித்தார்?<br>• மந்திரவாதிக்கு என்ன நடந்தது?<br>• இன்றைய முக்கிய வசனத்திலுள்ள வார்த்தைகளைப் பேசினது யார்? |

## A11 கதை 3

**பவுல் லீதியாளை சந்திக்கிறார் – இந்தக் கதையானது கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்த பெண்ணைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• கர்த்தராகிய இயேசுவை நம்புகிற எவரும் இரட்சிக்கப்படுவர்.<br>• நாம் எந்த இடத்திலிருந்தும் எதைப்பற்றியும் தேவனிடம் பேச முடியும்.<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 2: 21**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 16: 6-15** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • தூரமான ஒரு இடத்திற்கு பயணம்செய்ததைப் பற்றி பிள்ளைகளிடம் கேளுங்கள். எங்கே சென்றீர்கள்? அதற்கு எவ்வளவு நேரம் எடுத்தது? நீங்கள் அங்கே யாரைப் பார்த்தீர்கள்?<br>• இன்றையக் கதையில் பவுலும் அவரது நண்பர்களும் ஒரு இடத்திற்கு பயணம்செய்கிறார்கள் என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்குங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | • பவுலும் அவருடைய இரண்டு நண்பர்கள் சீலாவும் தீமோத்தேயுவும் நாடுவிட்டு நாடு கடந்து பல மைல்கள் பயணம் செய்தார்கள். தேவன் எங்கேப் போக விரும்பினாரோ அதை அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் சரியாகக் காட்டினார். அவர்கள் எங்கு சென்றாலும், கர்த்தராகிய இயேசுவைப் பற்றிக் கேட்கவேண்டிய தேவையில் நிறைய மக்கள் இருந்தார்கள். (அப்போஸ்தலர் 16:6-8)<br>• இறுதியில் அவர்கள் ஒரு கடலோர நகரத்திற்கு வந்தனர். அந்த இரவில் பவுல் ஒரு விசேஷக் கனவு கண்டார். அதில் மக்கெதோனியாவிலிருந்து ஒரு மனிதன் பவுலைக் கூப்பிட்டு, அங்கு வந்து மக்களுக்கு உதவும்படிக் கூறினான். அடுத்ததாக எங்குச் செல்ல வேண்டும் என்பதை தேவன் தெளிவாகக் காண்பிப்பதை பவுல் அறிந்தார். (அப்போஸ்தலர் 16: 9-10)<br>• அங்கிருக்கும் மக்கள் இயேசுவைப் பற்றி கேட்க வேண்டும் என தேவன் விரும்பியதால் பவுலையும் அவருடைய நண்பர்களையும் அங்கே அனுப்பினார் என்பதை விளக்குங்கள். நாம் எங்கே வாழ்கிறோம் என்பது தேவனுக்கு ஒரு பொருட்டே அல்ல. எல்லோரும் அவரைப் பற்றி கேட்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.<br>• சீக்கிரமே அவர்கள் அவ்விடத்திற்குப் போகும் ஒரு கப்பலைக் கண்டார்கள். அவர்கள் பிலிப்பி என்ற பெரிய நகரத்தை விரைவில் சென்றுடைந்தார்கள். ஓய்வு நாளில், பவுலும் அவருடைய நண்பர்களும் நகருக்கு வெளியே நதிக்கரைக்குச் சென்றார்கள். அங்கே ஜெபிப்பதற்காக வந்திருந்த சில ஸ்திரீகளை அவர்கள் கண்டார்கள். (அப்போஸ்தலர் 16: 11-13) ஆற்றங்கரையில் இருந்த ஸ்திரீகள் தேவனிடம் ஜெபித்தார்கள். தேவனிடம் நாம் எங்கிருந்து பேசலாம்? (நாம் எங்கிருந்தும் தேவனிடம் பேச முடியும் என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்குங்கள்)<br>• அங்கிருந்த ஸ்திரீகளுள் லீதியாள் என்று அழைக்கப்பட்டப் பெண்மணியும் இருந்தாள். அவள் ரத்தாம்பரக் கம்பளியை விற்றாள். அவள் நீண்ட காலமாக தேவன்மீது நம்பிக்கை வைத்திருந்தாள், ஆனால் தேவனுடையக் குமாரனாகிய இயேசுவைப் பற்றி அவள் கேள்விப்பட்டதே இல்லை. பவுல் சொன்ன அனைத்தையும் லீதியாள் கவனித்துக் கேட்டாள். தான் கேட்டது உண்மைதான் என அவள் உள்ளத்திற்குத் தெரிந்தது, அவள் கர்த்தராகிய இயேசுவின் ஒரு விசுவாசி ஆனாள். பவுல் தனது நகரத்திற்கு வந்ததற்காக அவள் மிகவும் சந்தோஷப்பட்டாள். (அப்போஸ்தலர் 16: 14-15) லீதியாளுடைய குடும்பத்தினரும் கிறிஸ்தவர்களாக ஆனார்கள். அவர்கள் எல்லாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள், பவுலையும் அவருடைய நண்பர்களையும் தன் வீட்டிற்கு வந்து தங்கும்படி லீதியாள் அழைத்தாள்.<br>• நாம் தேவனிடம் எதைப் பற்றிப் பேசலாம்? (பிள்ளைகள் சில யோசனைகளைக் கூறுவதற்கு அவர்களை அனுமதியுங்கள், நாம் எதைப் பற்றி வேண்டுமானாலும் தேவனிடம் பேச முடியும் என்று அவர்களுக்கு விளக்குங்கள்.)<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்திற்குச் செல்லுதல். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய அப்போஸ்தலர் 2: 21ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். கர்த்தருடைய நாமத்தில் தொழுகொள்ளுதல் என்றால் நம் பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்கும்படி கேட்பதாகும். இதைத்தான் இந்தக் கதையில் லீதியாள் செய்தாள். |
| **நினைவுகூருங்கள்** | • பவுலின் நண்பர்களில் ஒருவரின் பெயரைச் சொல்லுங்கள்.<br>• தேவன் விரும்பிய இடத்திற்குப் போக அவர்களுக்கு வழிகாட்டியது யார்?<br>• பவுலின் கனவில் நடந்தது என்ன?<br>• பவுலும் அவருடைய நண்பர்களும் மாசிடோனியாவுக்கு எவ்வாறு சென்றார்கள்?<br>• பவுல் மற்றும் அவரது நண்பர்கள் எங்கே ஸ்திரீகளை சந்தித்தனர்?<br>• அவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்?<br>• லீதியாளின் வேலை என்ன?<br>• இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டபோது லீதியாள் என்ன செய்தாள்? |

# A11 கதை 4

**பவுலும் சீலாவும் சிறையில் - இன்னும் அதிகமான மக்கள் இரட்சிக்கப்பட்டதைப் பற்றியதே இந்தக் கதை.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• நாம் இரட்சிக்கப்படுவதற்காக கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்க வேண்டும்.<br>• இயேசு தங்கள் இரட்சகராக இருப்பதால் கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியாய் இருக்கிறார்கள்.<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 16: 31**<br>**வேதப்பகுதி: அப்போஸ்தலர் 16: 16-34** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • அவர்களுக்கு எது மகிழ்ச்சியளிக்கிறது என பிள்ளைகளிடம் கேளுங்கள்.<br>• இன்றையக் கதையில் சில மகிழ்ச்சியான மக்கள் உள்ளனர் என்று பிள்ளைகளுக்கு சொல்லுங்கள். யார் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்பதை அறிய கதையை கவனமாக கேட்கச் சொல்லுங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | • ஒருநாள், பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்தில் இருந்தபோது, ஒரு அடிமைப் பெண்ணுக்கு உதவினார்கள். இது அவளுடைய உரிமையாளர்களை மிகவும் கோபமடையச் செய்ததால், அவர்கள் பவுலையும் சீலாவையும் சந்தைப் பகுதியில் இழுத்துச் சென்று அவர்களைப் பற்றிப் பொய் சொன்னார்கள். (அப்போஸ்தலர் 16: 16-21)<br>• பவுலையும் சீலாவையும் அடித்து, பின்னர் அவர்களைச் சிறையில் அடைத்தனர். சிறைச்சாலை அதிகாரி அவர்களைச் சங்கிலிகளால் பிணைத்து, அவர்களுடைய கால்களைத் தொழுமரத்தில் மாட்டினான். (அப்போஸ்தலர் 16: 22-24) பவுலும் சீலாவும் எப்படி உணரவேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?<br>• நள்ளிரவில், பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி தேவனை துதித்துப் பாடுவதை மற்ற கைதிகளும் கேட்டார்கள்! அவர்களுடைய முதுகு காயப்பட்டிருந்தாலும், அப்பொழுதும் அவர்கள் தேவனைத் துதிக்க முடிந்தது. (அப்போஸ்தலர் 16: 25)<br>• திடீரென்று மற்றொரு சத்தம் கேட்டது. எல்லாம் படபடவென அடித்து அதிர்ந்தன. கதவுகள் திறந்தன, சங்கிலிகள் விழுந்தன. அது ஒரு பூகம்பம். (அப்போஸ்தலர் 16: 26)<br>• சிறைச்சாலை அதிகாரி எழுந்து சிறைச்சாலையின் எல்லாக் கதவுகளும் திறந்திருப்பதை கவனித்தார். அவர் முதலாவது என்ன நினைத்திருப்பார்? எல்லாக் கைதிகளும் அங்கேயே இருப்பதால் கவலைப்படவேண்டாம் என்று பவுல் அவரிடம் சொன்னார். (அப்போஸ்தலர் 16: 27-28)<br>• தான் ஒரு பாவி என்பதை அறிந்திருந்ததால், அவர் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் என பவுலிடம் கேட்டார். அதற்குப் பவுல் "கர்த்தராகிய இயேசுவை விசுவாசி, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்" என்றார். பவுலும் சீலாவும் சிறைச்சாலை அதிகாரிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவர்களுடைய பாவங்களுக்காக இயேசு சிலுவையில் மரித்தார் என்பதை விளக்கினார்கள். சிறைச்சாலை அதிகாரி பவுலையும் சீலாவையும் வீட்டிற்கு அழைத்துச் சென்றபோது, அவர்களுடைய காயங்களைக் கழுவி அவர்களுக்கு உணவளித்தார். அவர்கள் அனைவரும் இயேசுவை விசுவாசித்ததால் சிறைச்சாலை அதிகாரிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அது மிகவும் சந்தோஷமான இரவாக இருந்தது. (அப்போஸ்தலர் 16: 29-34)<br>• இந்தக் கதையில் யார் சந்தோஷமாக இருந்தார்கள்? ஏன் அவர்கள் சந்தோஷமாக இருந்தார்கள்? (பிள்ளைகள் பவுல், சீலா, சிறைச்சாலை அதிகாரி மற்றும் அவரது குடும்பத்தாரைப் பற்றி பேச ஊக்குவியுங்கள். இயேசு அவர்களை இரட்சித்ததால் அவர்கள் சந்தோஷமாக இருந்ததை அவர்களுக்கு விளக்குங்கள்)<br>• நம்முடைய பாவத்திலிருந்து நாம் இரட்சிக்கப்பட வேண்டும் என்று பிள்ளைகளுக்கு விளக்குங்கள். நாம் இயேசுவை விசுவாசிக்க வேண்டும், ஏனென்றால் அவர் தேவனுடைய குமாரன், அவர் நமக்காக மரித்தார்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI - பவுலும் சீலாவும் சிறைச்சாலையில். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய அப்போஸ்தலர் 16: 31ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • பவுலும் சீலாவும் யாருக்கு உதவினார்கள்?<br>• பவுலுக்கும் சீலாவுக்கும் என்ன நடந்தது?<br>• நள்ளிரவில் பவுலும் சீலாவும் என்ன செய்தார்கள்?<br>• அவர்கள் பாடிக்கொண்டிருக்கும்போது என்ன நடந்தது?<br>• பூகம்பத்திற்குப் பின் சிறைச்சாலைக்காரன் ஏன் பயந்தான்?<br>• சிறைச்சாலைக்காரன் பவுலையும் சீலாவையும் என்ன கேட்டான்?<br>• பவுலும் சீலாவும் அவனுக்கு என்ன சொன்னார்கள்?<br>• அன்றிரவு அந்தச் சிறைச்சாலைக்காரன் என்ன செய்தான்?<br>• இந்தப் பாடத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள முடிகிறது? |

## A12 கதை 1

**சகரியாவும் எலிசபெத்தும் – இந்தக் கதையானது தேவன் ஜெபத்திற்கு பதிலளிப்பதைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார்.<br>• தேவனுடைய நேரத்தில் ஜெபங்களுக்கு பதில் அளிக்கப்படுகிறது, நம்முடைய நேரத்தில் அல்ல.<br>**முக்கிய வசனம்: லூக்கா 1: 13**<br>**வேதப்பகுதி: லூக்கா 1: 5–25** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • பிள்ளைகளின் குடும்பங்களைப் பற்றி அவர்களிடம் கேளுங்கள். அவர்களது குடும்பத்திலுள்ள குழந்தைகளைப் பற்றி, உறவினரைப் பற்றி அவர்களோடு கலந்து பேசுங்கள். குழந்தைகள் மக்களை மகிழ்ச்சியடையச் செய்கிறார்கள்.<br>• பிள்ளைகள் உண்மையிலேயே விரும்பும் ஒன்றைப் பற்றி யோசிக்கும்படி அவர்களிடம் கேளுங்கள். அவர்கள் ஏன் அதை விரும்புகிறார்கள் என்பதை அவர்கள் விளக்க முடியுமா? இன்றையக் கதையில் வரும் தம்பதியினரும் கொஞ்சம் அவ்வாறு உணர்ந்தார்கள், அவர்களுக்கு ஒரு குழந்தை வேண்டும்! |
| **கற்றுக்கொடுங்கள்** | • சகரியாவும் எலிசபெத்தும் தங்களுக்கு ஒரு குழந்தை வேண்டும் என விரும்பியிருப்பார்கள். அவர்களுக்கு வயதாகிக்கொண்டிருக்கையில் பல நண்பர்களின் வீட்டிலும் சிறு குடும்பங்கள் இருந்தன, ஆனால் அவர்கள் மட்டும் தனிமையில் இருந்தார்கள். இது அவர்களுக்கு எப்படி இருந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பிள்ளைகள் இல்லாத காரணத்தால் சகரியாவும் எலிசபெத்தும் எதை இழந்திருப்பார்கள்? பிள்ளைகள் தங்கள் சொந்தச் சூழல்/கலாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையில் கருத்துக்களைக் கூறட்டும். (லூக்கா 1: 5–7)<br>• அதைப் பற்றி தேவனிடம் ஜெபிக்க அவர்கள் தீர்மானித்தார்கள். தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கக் கூடியவர் என்பது அவர்களுக்குத் தெரியும்! (லூக்கா 1: 13) நாம் நமக்கிருக்கும் எந்தப் பிரச்சனைக்காகவும் ஜெபிக்கலாம் என்பதைப் பிள்ளைகளிடம் சொல்லுங்கள்.<br>• தேவன் ஜெபத்தைக் கேட்டார், ஆலயத்தில் ஊழியம் செய்யும்போது சகரியாவைச் சந்திக்க ஒரு தூதனை அனுப்பினார். தேவதூதன் தோன்றியபோது சகரியா எப்படி உணர்ந்திருப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பயப்பட வேண்டாம் என்று சகரியாவிடம் தேவதூதன் கூறிவிட்டு, மேலும் எலிசபெத் ஒரு மகனைப் பெறப்போகிறாள், அவனுடைய பெயர் யோவான் என்று இருக்கவேண்டும் என்ற நற்செய்தியைச் சொன்னான். (லூக்கா 1: 8–11)<br>• தனக்கு அறிவிக்கப்பட்ட செய்தியை சகரியாவால் நம்ப முடியவில்லை. எலிசபெத்தும் தானும் ஒரு குழந்தையைப் பெற இயலாத அளவுக்கு மிக வயதானவர்கள் என்று அவர் நினைத்தார். தேவனிடமிருந்து வரும் செய்தியை நம்பாததால், அவர்களுடைய மகன் பிறக்கும் வரை அவர் பேச முடியாமல் இருப்பார் என்று தேவதூதன் அவரிடம் சொன்னான். (லூக்கா 1: 18–20)<br>• நாம் சகரியாவிடமிருந்து ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம் … நாம் ஜெபிக்கும்போது தேவன் நம் ஜெபங்களுக்கு பதிலளிப்பார் என்று நம்ப வேண்டும்.<br>• இன்று ஜெபிக்கக்கூடிய சில விஷயங்களை கவனியுங்கள்!<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – சகரியாவுக்கு ஒரு மகன் வாக்குத்தத்தம் செய்யப்படுகிறார் (P). யோவான் ஸ்நாபகனின் பிறப்பு (I) |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய லூக்கா 1: 13ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • சகரியா யாரைத் திருமணம் செய்திருந்தார்?<br>• உண்மையில் அவர்களுக்கு என்னத் தேவையாயிருந்தது ?<br>• சகரியாவும் எலிசபெத்தும் யாரிடம் ஜெபம்செய்தார்கள்?<br>• தேவாலயத்தில் சகரியாவை சந்திக்க வந்தது யார்?<br>• தேவதூதன் தோன்றியபோது சகரியா எப்படி உணர்ந்தார்?<br>• தேவதூதனிடமிருந்து வந்தச் செய்தி என்ன?<br>• அந்தச் செய்தியை நம்பாததால் சகரியாவுக்கு என்ன நடந்தது?<br>• நாம் ஜெபிக்கும்போது என்ன முக்கியமான விஷயத்தை செய்யவேண்டும்? |

# A12 கதை 2

**மரியாள் மற்றும் காபிரியேல் – இந்தக் கதை மரியாள் தேவனை நம்புவதைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• அது நடப்பதற்கு சாத்தியமில்லை என்று அவளுக்குத் தோன்றினாலும், மரியாள் தேவதூதனின் செய்தியை ஏற்றுக்கொண்டாள்.<br>• அசாத்தியம் என்று தோன்றுகிற காரியங்களை தேவனால் செய்ய முடியும்.<br>**முக்கிய வசனம்: லூக்கா 1: 37**<br>**வேதப்பகுதி: லூக்கா 1: 26-38** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | சகரியாவும் எலிசபெத்தும் ஒரு குழந்தையைப் பெறப்போகிறார்கள் என்ற கடந்த வாரக் கதையை மீள்பார்வை செய்யுங்கள். அதற்குப்பின்பு தேவன் விரைவில் தேவதூதனை மற்றொரு சிறப்புச் சந்திப்பிற்கு அனுப்பினார். |
| **கற்றுக்கொடுங்கள்** | • எலிசபெத்துக்கும் மரியாளுக்கும் உள்ள வேறுபாடு காண்க. மரியாள் ஒரு சிறு பெண்ணாக இருந்தாள், அவள் நாசரேத்து ஊரில் குடியிருந்த யோசேப்பு என்று அழைக்கப்பட்ட ஒருவருக்குத் திருமண நிச்சம்செய்யப்பட்டிருந்தாள். ஒருநாள் காபிரியேல் என்ற ஒரு தேவதூதன் அவளைச் சந்திக்க வந்தான். (லூக்கா 1: 26-27) இது ஒரு வழக்கமான சம்பவம் அல்ல என்பதையும், மரியாளுக்கு இயல்பாகவே பயமாக இருந்தது என்பதையும் பிள்ளைகள் புரிந்துகொள்ள உதவிசெய்யுங்கள்.<br>• தேவதூதன் அவளிடம் பயப்பட வேண்டாம் என்று சொன்னான். அவள் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கப்போவதாக அவளிடம் காபிரியேல் சொன்னபோது அவள் கவனமாகக் கேட்டாள். மரியாள் சற்றுக் குழப்பமடைந்தாள்; அவளுக்கு இன்னும் ஒரு கணவன் இல்லை. பரிசுத்த ஆவியான தேவன் அவளுக்கு இந்த விசேஷமான குழந்தையைக் கொடுப்பார் என்று தேவதூதன் அவளிடம் சொன்னான். அந்தக் குழந்தையை அவள் இயேசு என்று அழைக்க வேண்டும். (லூக்கா 1: 29-34)<br>• அதற்குமுன் பிறந்திருந்த மற்ற எல்லாக் குழந்தைகளையும் விட இயேசு உன்னதமானவராக இருப்பார். அவர் தேவனுடைய மகனாக இருப்பார். அதைப் புரிந்துகொள்ளக் கடினமாக இருக்கலாம், ஆனால் தேவனால் முடியாத காரியம் எதுவும் இல்லை என்று தேவதூதன் மரியாளிடம் கூறினான். (லூக்கா 1: 35-37)<br>• மரியாள் தனக்குச் சொல்லப்பட்ட செய்தியை நம்பினாள். தேவன் தமது மகனை உலகிற்கு அனுப்புவதற்கான சிறப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக தான் இருப்பதற்கு மரியாள் மனதுள்ளவளாக இருந்தாள். இயேசுவின் பிறப்பு ஆச்சரியமான அற்புதமாக இருக்கும். (லூக்கா 1: 38)<br>• நீங்கள் நம்புவதற்கு கடினமான ஏதாவது ஒரு வாக்குறுதி உங்களுக்கு அளித்திருக்கிறார்களா?<br>• மரியாள் தேவதூதனை ஏன் நம்பினாள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? மரியாளைப் போலவே நாம் ஒவ்வொருவரும் அவரை நம்பவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – ஒரு தேவதூதன் மரியாளை சந்தித்தல். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய லூக்கா 1: 37ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • மரியாள் எங்கே வாழ்ந்தாள்?<br>• மரியாளை யாருக்கு நிச்சயம் செய்திருந்தார்கள்?<br>• மரியாளை சந்தித்த தேவதூதனின் பெயர் என்ன?<br>• தேவதூதனின் செய்தியைக் குறித்து மரியாள் ஏன் சற்றுக் குழப்பமடைந்தாள்?<br>• குழந்தை எந்த விதத்தில் சிறந்ததாக இருக்கும்?<br>• அந்தச் செய்தியைப் பற்றி மரியாள் என்ன செய்தாள்?<br>• நாம் பின்பற்றுவதற்கு மரியாள் எப்படி ஒரு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறாள்?<br>• தேவனால் செய்ய முடியாத அசாத்தியமான காரியங்கள் எவை? |

## A12 கதை 3

**யோவனின் பிறப்பு – இந்தக் கதை தேவனின் வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• சகரியாவுக்கும் எலிசபெத்துக்கும் கொடுத்த வாக்குறுதியை தேவன் நிறைவேற்றினார்.<br>• தேவன் நமக்களிக்கும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றுகிறார்.<br>**முக்கிய வசனம்: லூக்கா 1: 76**<br>**வேதப்பகுதி: லூக்கா 1: 57–80** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • பல மாதங்கள் பேசாமல் இருந்தால் எப்படியிருக்கும் என்பது பற்றி விவாதிக்கவும். தேவதூதன் சொன்ன செய்தியை விசுவாசிக்காததால் சகரியாவுக்கு இதுதான் சம்பவித்தது என்பதை பிள்ளைகளுக்கு நினைவூட்டுங்கள்.<br>• கிறிஸ்மஸ் தினத்தன்று காலையில் அல்லது உங்கள் பிறந்த நாளில் நீங்கள் பெறக் காத்திருந்த பரிசு உங்களுக்குக் கிடைத்தபோது எப்படியிருந்தது? தேவதூதன் வாக்குக் கொடுத்ததைப் போலவே ஒரு ஆண் குழந்தை பிறந்தபோது சகரியாவும் எலிசபெத்தும் அப்படித்தான் உணர்ந்திருக்க வேண்டும். இது அவ்வளவு விசேஷமான நேரம்! |
| **கற்றுக்கொடுங்கள்** | • குழந்தை குடும்பத்தில் வந்தபோது, தனது அப்பாவைப் போலவே அக்குழந்தையை சகரியா என்று அழைக்க வேண்டும் என அவரின் அண்டை வீட்டார் கூறினர். அவனுடையப் பெயர் யோவான் என்று இருக்கவேண்டும் என எலிசபெத் சொன்னார். (லூக்கா 1: 57–60) அவன் யோவான் என்று அழைக்கப்படுவான் என்று எலிசபெத் ஏன் சொன்னார்?<br>• குழந்தைக்கு என்னப் பெயர் வைக்கவேண்டும் என்று சகரியாவிடம் கேட்டபோது, “அவனுடைய பெயர் யோவான்” என்று எழுதினார். (லூக்கா 1: 62–63)<br>• அந்த நேரத்தில் உடனே அவரால் மீண்டும் பேச முடிந்தது. சகரியா நன்றி சொல்லி தேவனைத் துதித்தார். சகரியா ஏன் இதைச் செய்தார்? தேவன் அவருடைய வாக்குறுதியை நிறைவேற்றினார், தனக்கு மகன் பிறந்தபோது சகரியா மகிழ்ச்சி அடைந்தார், விரைவில் தேவன் இன்னும் பெரிய காரியங்களைச் செய்வார் என்பதை அவர் அறிந்திருந்தார்! தாங்கள் பார்த்தவற்றைக் குறித்து எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். (லூக்கா 1: 64–66)<br>• யோவான் ஒரு விசேஷமான பையன். ஏன்? அவனது பெற்றோர் அவனுக்காகப் பல ஆண்டுகள் காத்திருந்தார்கள், ஆனால் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால் அவன் வளர்ந்து கர்த்தராகிய இயேசுவின் வருகைக்காக வழியை ஆயத்தம்செய்வான் என்பதைப் பிள்ளைக்கு நினைவூட்டுங்கள்.<br>• தேவன் நமக்கும்கூட வாக்குறுதிகளை நிறைவேற்றுவார். பைபிளில் அவர் நமக்குத் தந்திருக்கும் வாக்குறுதிகளில் ஓரிரண்டைக் குறிப்பிடுக.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – யோவான் ஸ்நாபகன். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய லூக்கா 1: 76ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • எலிசபெத்தின் கணவன் யார்?<br>• ஏன் அவரால் பேச முடியவில்லை?<br>• அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் அந்தக் குழந்தைக்கு என்ன பெயர் வைக்க வேண்டுமென்று விரும்பினார்கள்?<br>• சகரியாவும் எலிசபெத்தும் அவனை ஏன் யோவான் என்று அழைத்தார்கள்?<br>• சகரியாவால் மீண்டும் எப்போது பேச முடிந்தது?<br>• யோவான் என்ன சிறப்பு வேலையைச் செய்வார்?<br>தயாரியுங்கள்: குழந்தை யோவானுக்கான பிறந்தநாள் அறிவிப்பு அட்டையை பிள்ளகள் தயாரிக்கலாம். |

## A12 கதை 4

**இயேசுவின் பிறப்பு – இந்தக் கதை தேவன் தமது குமாரனை நமக்குக் கொடுத்ததைப் பற்றியது.**

| | |
|---|---|
| | **நாம் கற்றுக்கொள்வது:**<br>• நமது இரட்சகராக வந்த தேவ குமாரன் இயேசு.<br>• கர்த்தராகிய இயேசுவை அனுப்புவதில் தேவன் காட்டிய பேரன்புக்காக நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.<br>**முக்கிய வசனம்:** **லூக்கா 2: 7**<br>**வேதப்பகுதி:** **லூக்கா 2: 1–7** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • கடைசி நிமிடத்தில் திட்டங்கள் எப்படி மாற்றப்படலாம் என்பதைப் பற்றி பேசுங்கள். இதற்குப் பிள்ளைகளின் அனுபவத்திலிருந்து அல்லது உங்கள் சொந்த அனுபவத்திலிருந்து இந்தச் சூழநிலைக்குப் பொருத்தமான ஒரு உதாரணத்தைக் கொடுங்கள்.<br>• மரியாளுக்குக் குழந்தைப் பிறக்கும் நாள் நெருங்கி வந்ததை விளக்குங்கள். ஜோசப்பும் மரியாளும் வசித்துவந்த நசரேத்து ஊரில் குழந்தைப் பிறந்திருந்தால் எளிதாக இருந்திருக்கும். ஆனால் ..... |
| **கற்றுக்கொடுங்கள்** | • அனைத்து மக்களும் தங்கள் பெயர்களைப் பட்டியலில் சேர்ப்பதற்காக தத்தமது பிறந்த இடங்களுக்குத் திரும்பும்படி ரோமப் பேரரசர் உத்தரவிட்டார். யோசேப்பும் மரியாளும் பெத்லகேமுக்குப் பயணம் செய்ய வேண்டியிருந்தது. (லூக்கா 2: 1–5) தூரம் சம்பந்தப்பட்ட விசயத்தில் சில ஆலோசனைகளைக் கொடுங்கள் – சுமார் 80 மைல்கள் போக 4 நாட்கள் பயணம் செய்ய வேண்டும்.இந்த நீண்ட பயணத்தை மேற்கொண்டது அவர்களுக்கு எவ்வாறு இருந்திருக்கும்? (அந்தக் குழந்தை பெத்லகேமில்தான் பிறக்கவேண்டும் என்பது தேவனின் திட்டமாக இருந்தது என்று நிலை 2ல் இருக்கும் பிள்ளைகளுக்குக் கூடுதலாக விளக்கலாம்!)<br>• அவர்கள் வந்தபோது, நகரம் முழுவதும் நிறைந்திருந்தது, அவர்கள் தங்குவதற்கு எங்கும் இடம் காணப்படவில்லை. அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட குழந்தை வரும் சமயம் நெருங்கிக்கொண்டிருந்தது. விலங்குகள் வாழ்கின்ற தொழுவத்தில் அவர்கள் ஓய்வெடுக்க வேண்டியிருந்தது. (லூக்கா 2: 6–7)<br>• குழந்தை இயேசு பிறந்தபோது, பிறந்த குழந்தையைப் போர்த்திவைக்கும் துணியால் போர்த்தப்பட்டு, விலங்குகளுக்கு உணவளிக்கும் ஒரு முன்னணையில் அவர் கிடத்தப்பட்டார். (லூக்கா 2: 6–7) இயேசுவை ஏன் துணியால் சுற்றி முன்னணையில் கிடத்தினர்? அவ்வளவு தாழ்வான இடத்தில் பிறந்த குழந்தையின் மகத்துவத்தை பிள்ளைகள் பாராட்டும்படிக் கூறுங்கள். நீங்கள் வசிக்கும் கலாச்சாரத்தில் ஒரு குழந்தையின் வருகையோடு ஒப்பிட்டு இதை வேறுபடுத்திப்பாருங்கள்.<br>• இயேசுவைப் போல மற்றொரு குழந்தை ஒருபோதும் இருந்ததேயில்லை. அவர் தேவனுடைய குமாரன். நம் பாவத்திலிருந்து நம்மை இரட்சிப்பதற்காக அவர் பரலோகத்தைவிட்டுவந்து இந்தப் பூமியில் பிறந்தார். (மத்தேயு 1: 21)<br>• கிறிஸ்துமஸைப் பற்றிய செய்தியெல்லாம் இதுவே என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும், மேலும் இரட்சகரை அனுப்புவதில் தேவன் காட்டிய அன்புக்காக நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.<br>முதல் பைபிள்டைம் பாடத்தை முடியுங்கள்.<br>காண்பியுங்கள்: FBI – இயேசுவின் பிறப்பு.<br>also PowerPoint www.bibleforchildren / the birth of Jesus. |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனமாகிய லூக்கா 2: 7ஐ தேவைப்படும் இடங்களில் விவரித்துக் கற்றுக்கொடுங்கள். |
| **நினைவுகூருங்கள்** | • யோசேப்பு யாரைத் திருமணம் செய்திருந்தார்?<br>• மரியாளும் யோசேப்பும் எங்கு வாழ்ந்தார்கள்?<br>• யோசேப்பும் மரியாளும் எங்குச் சென்றார்கள்?<br>• பெத்லகேமில் யோசேப்பும் மரியாளும் ஏன் பெத்லகேமில் இருந்தார்கள்?<br>• விலங்குகளை வளர்க்கும் இடத்தில் அவர்கள் ஏன் ஓய்வு எடுத்துக்கொண்டார்கள்?<br>• குழந்தையான இயேசுவை எங்கே கிடத்தியிருந்தார்கள்?<br>• இயேசுவை சிறப்புடையவராக ஆக்கியது எது?<br>• நமக்கு ஒரு இரட்சகர் வேண்டும், ஏன்? |

# பாடங்களுக்கு மதிப்பெண் வழங்குவதில் ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்

**நிலை 1 பாடங்கள்**:

- ஒவ்வொரு வாரத்திற்கும் ஒரு பக்கம் (அல்லது சிறுபுத்தகங்களில் இரண்டு பக்கங்கள்) முக்கியமாக வண்ணம்தீட்டுதல் மற்றும் சில விடுபட்ட வார்த்தைகளை நிரப்புதல் ஆகியவை உள்ளன.
- ஒவ்வொரு வாரத்திற்கும் 10 மதிப்பெண்கள், மாதத்திற்கு அதிகபட்சம் 40 மதிப்பெண்கள் ஒதுக்கப்படும்.
- நிலை 1 பாடங்களைப் பெறும் குழந்தைகள் நன்றாகப் படிக்க முடியும் என எதிர்பார்க்கவில்லை. ஆதலால் அவர்களுக்கு பெற்றோர் / பாதுகாவலர்கள் / தலைவர்கள் உதவி செய்யவேண்டும்.
- ஒவ்வொரு விடைக்கும் 2 மதிப்பெண்கள், மீதமுள்ளது வண்ணம்தீட்டுதலுக்கு = ஒவ்வொரு பாடத்திற்கும் 10 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகிறது.

**நிலை 2 பாடங்கள்**:வாரத்திற்கு இரண்டு பக்கங்கள். (4 சிறு புத்தகங்களிலிருந்தும்)

- கதை பாடத்துக்குள் அடங்கியிருக்கிறது. மாணவர்கள் பாடத்திலிருந்து பல்வேறு வார்த்தைகளை கண்டுபிடிக்க வேண்டும், சிலவற்றுக்கு வண்ணம்தீட்ட வேண்டும், முக்கியமான வசனங்களை முழுமையாக்க வேண்டும், மேலும் இதுபோன்றவை.
- பாடங்கள் முற்றிலும் சரியாக இருக்குமெனில், ஒவ்வொரு வாரமும் 20 மதிப்பெண்கள், அதிகபட்சமாக மாதத்திற்கு 80 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகிறது.

**பைபிள்டைம் மதிப்பெண் வழங்கும்முறை**

**மதிப்பெண் வழங்குவதற்கான குறிப்புகள்**

**ஆசிரியர்களை முதலாவது கேட்டுக்கொள்வது**:

- ஒவ்வொரு பாடத்தையும் சரிபார்த்து, பதில்களைச் சரியானவை அல்லது தவறானவை எனக் குறிக்கவும்.
- அறிவுறுத்தப்பட்டபடி தேவையான புள்ளிகளை வழங்குங்கள்.
- எப்போதும் மாறுபட்ட நிறத்தில் குறியிடுங்கள், ஒவ்வொரு சரியான பதிலையும் டிக் செய்யுங்கள்.
- சரியான பதிலைக் குறிப்பிட்டு, தேவையான இடங்களில் எழுத்துப்பிழைகளைச் சரிசெய்யவும், இதற்காக மதிப்பெண் எதுவும் குறைக்கப்படுவதில்லை.
- ஓரளவு சரியான பதில்களுக்கு குறைந்த மதிப்பெண்களைக் கொடுங்கள்.
- மாதத்தில் பெற்ற மொத்த மதிப்பெண்களைக் கூட்டி பின் பக்கத்தில் அதற்கென கொடுக்கப்பட்ட இடத்தில் அதை எழுதுங்கள்.

மாணவர்களுக்கு அவர்களுடைய வேதஆராய்ச்சியில் இயன்றவரை எல்லாவகையிலும் தாராள மனதோடு ஊக்குவிப்பது உண்மையில் அவசியமானது. ஒவ்வொரு மாதமும் ஆசிரியர் மாணவர்களை ஊக்குவிக்கும் வார்த்தைகளை பாடப்பகுதியில் அதற்கென்று தரப்பட்டுள்ள இடத்தில் எழுதுவது உதவியாய் அமையும். நல்ல வர்ணம்தீட்டுதல், சுத்தம், பெற்ற மதிப்பெண்கள், மாணவர் பாடத்தைப் புரிந்துகொண்டவிதம் போன்றவற்றைப்பற்றி ஆசிரியரின் கருத்தை எழுதிவைக்கலாம்.

கருத்துக்கள் பலதரப்பட்டதாக இருக்கும்படி முயற்சிக்கிறோம். கேள்விகள், கூற்றுகள், கண்டறிந்தவை, ஊக்குவிக்கும் வாசகங்கள் போன்றவையும் பலதரப்பட்டதாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். சிந்தனை செய்வது இதற்கு அவசியம், ஆனால் அதே நேரத்தில் மாணவர்களின் உற்சாகம் களைகட்டியிரும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாதமும் ஒரேவிதமான வாசகமும் ஒரேவிதமான கேள்வியும் மீண்டும் மீண்டும் வருமானால் அது தாக்கம் குறைந்து பலனற்றதாகிவிடும்.

**நிலை 1**

**பொதுவான கருத்துகள்**

“ஆமி – நீ இந்த பாடங்களை படிக்க ஆரம்பித்ததில் மகிழ்ச்சிடைகிறேன், உனக்கு இந்தப் பாடங்களைப் பிடித்திருக்கிறதென நம்புகிறேன். நான் உனது வண்ணம்தீட்டுதலை விரும்புகிறேன். நீ பள்ளிக்குச் செல்கிறாயா? அதைப் பற்றி என்னிடம் சொல். விரைவில் உன்னிடமிருந்து பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.”

“நல்லது, ஆன்ட்ரூ. மிக அருமையாக வண்ணம்தீட்டியிருக்கிறாய். கோடுகளுக்கு உள்ளேயே இருப்பது சிரமமாக இருந்ததா? கடைசிப் பாடத்தில் ஒரு சிறு பகுதியை வண்ணம்தீட்டாமல் விட்டுவிட்டாய்.”

### ஆன்மீக கருத்துக்கள்

“நல்லது, சாரா. இயேசு யவீருக்கு உதவியபோது  அவன் எவ்வளவு சந்தோஷமான மனிதனாய் காணப்பட்டான்.”

“மிக நல்ல பதில்கள்! இயேசு மரிக்கும் கதை சோகமாக இருக்கிறது,  ஆனால் அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தது  மகிழ்ச்சியான விஷயம்.”

## நிலை 2

### பொது கருத்துகள்

“மீண்டும் நல்ல பதில், ஜோவன்னா — பள்ளியில் உனது வேலையைப் பார்த்து உனது ஆசிரியர்  மிகவும் சந்தோஷப்படுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்!”

“விரைவில் உனது பிறந்த நாள் வருகிறதென்று அறிகிறேன், கொண்ணார். நீ சிறப்பான எதையும் செய்யப்போகிறாயா?  நீ என்ன செய்தாலும்,  அந்த நாள் சிறந்த நாளாகட்டும்!”

“நீ மிகவும் கடினமாக முயற்சி செய்திருக்கிறாய். சில சிறு தவறுகளே உள்ளன. ஒவ்வொரு முறையும் உன் பதில்களை சரிபார்க்க மறக்க வேண்டாம்.”

### ஆன்மீக கருத்துக்கள்

“நீ முன்னணையில் குழந்தை இயேசு இருப்பதைப்போல் வண்ணம்தீட்டிய விதத்தை நான் விரும்புகிறேன். அவரை நமக்காக உலகுக்கு அனுப்பியது கடவுளின் நல்லமனதைக் காட்டுகிறதல்லவா?”

“நான் நீ தெரிவுசெய்த நிறங்களை மிகவும் விரும்புகிறேன்! தேவன் சொன்னதை நம்பாததற்காக சகரியா ஒரு விலை கொடுக்க வேண்டியிருந்தது. அதற்குப் பிறகு ஒருபோதும் அவர் தேவனுடைய வார்த்தையை சந்தேகப்படவில்லை.”

அருமையான பதில்கள். பாலைவனத்தில் பிலிப்பை சந்தித்த அந்த மனிதர் உண்மையிலேயே மகிழ்ச்சியாகத் திரும்பிச் சென்றார். அவர் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கேட்டு விசுவாசித்தார்.”

© Bible Educational Services 2015

www.besweb.com